# நாற்று

11 ஆவது இதழ் 1998

விலை: 22.00



தாய்மை ஒரு கோபுரம்

"கண்ணுக்கு மட்டும் இனியவள் நீ என்பதை - பெண்ணே
கருத்துக்கும் இனியவள் நான் என உணர்த்து"

# நுழைவாயில்

தாய்மை! இலக்கியங்கள் அனைத்தும் போற்றிப் புகழ்ந்து, வியந்து, வணங்கி மெச்சும் ஓர் உன்னத பண்பு. தாய்மையின் அணைப்பில் ஆறுதல் பெறத் துடிக்கும் ஆயிரமாயிரம் அநாதரவான ஜீவன்களின் ஏக்கத்திற்குரிய ஓர் உணர்வு. மனிதர்களுக்கு மட்டுமன்றி விலங்கினங்களுக்கும் பொதுவானதொன்று. குஞ்சுக்கு தனது அலகினால் உணவூட்டும் தாய்க்குருவியின் செயலில், உடலை நக்கியபடி தனது கன்றுக்கு பாலூட்டும் பசுவின் நடத்தையில், எதிரியிடமிருந்து பாதுகாக்கும் பொருட்டு தனது சிறகுக்குள் அடைக்கலம் கொடுக்கும் தாய்க் கோழியின் கவனத்தில், பொக்கை வாய்ச் சிரிப்பில் தன்னை மறந்து உச்சி மோந்து பாலூட்டும் அன்னையின் அணைப்பில் நாம் காண்பது தாய்மை. தனது குஞ்சுகள் தனித்து இயங்கும் வரை மட்டுமே விலங்குகளிடம் நாம் காணும் தாய்மை உணர்வு, மனிதர்களிடம் மட்டும் குழந்தை வளர்ந்து பெரியவனாகி தனக்கென குடும்பம் அமைத்து வாழ்ந்து இறக்கும் வரை நிரந்தரமாக நின்று நிலைத்து விடுகிறது.

பெண்களின் பல்பரிமாண ஆற்றல் வெளித் தெரியும் வாய்ப்பற்று வீட்டிற்குள்ளேயே பெண்ணினம் அடைந்து வெறும் குழந்தை உற்பத்திச் சாதனமாக மட்டும் உலா வந்த நாட்களில் பெண்ணுக்கே சிறப்பானதாக இருந்த தாய்மைப் பேறு என்ற உயரிய அம்

சத்தின் காரணமாக தாய்மை என்பது குழந்தை பெற்ற அன்னைக்கு மட்டுமே உரிய தனிச் சிறப்பம்சமாக இலக்கியங்களில் ஏற்றிப் போற்றிப் பாராட்டப்பட்டு இயற்கையின் கொடையாக, பூர்வ புண்ணிய நற்பல னாக, மனித மனங்களில் ஆழமாக வேரோடி நீடித்து நிலைத்து விட்டது. எனவே எவருமே தாய்மையின் பண்பை செயற்கையானதாக, ஆச்சரியத்திற்குரிய அம் சமாக கருதவில்லை.

ஆனால் பெண்களுக்கு சுதந்திரம் கொடுத்து வீட்டுக்கு வெளியே வந்து அவர்களின் பல்பரிமாண ஆற்றல்கள் வெளிக் கொணர வழிவகுத்த கால மாற்ற மானது இரண்டு நேர் எதிர் விளைவுகளை இச் சமு கத்தில் ஏற்படுத்தியிருக்கிறது. தனது கட்டுமீறிய சுதந் திர உணர்வின் வெளிப்பாடாக தாய்மை உணர்வையே கொச்சைப்படுத்தும் வகையில் பெற்ற பிள்ளைகளையே தனக்கு சுமையாக கருதி அநாதரவாக கைவிடுதலும், கழுத்தை நெரித்து கொலை செய்வதும் உலக அரங்கில் பரவலாக நடைபெறுவதும் என தாய்மையை கேள்விக் குரியதாக்கும் நிகழ்வுகள் ஒருபுறம் இருக்க, மறுபுறம் தாய்மை என்பது தாய்க்கு மட்டும் உரியதன்று. அது பால்வேறுபாடு அற்றது, வயது வேறுபாடு இல்லாதது என்று தாய்மைக்கு புது வரைவிலக்கணம் கொடுத்து உலக அரங்கில் உலா வருகின்ற நோயாளிகளை அன் புடன் பராமரிக்கும் தாதியரின், அநாதை இல்லங்கள் அமைத்து அநாதரவான குழந்தைகளை பாதுகாக்கும் கன்னியரின் குழந்தை பெறாத அன்னையரில், தாயை இழந்த குழந்தைகளை தாய்மையுணர்வுடன் பாதுகாக் கும் தந்தையர், குண்டு வீச்சில் தாய் தந்தை இருவ ரையும் பறிகொடுத்து அழும் குட்டித் தங்கையை அணைத்து ஆறுதல் கூறும் எட்டு வயதும் நிரம்பாத அண்ணன், அன்னையின் அன்புக்கு ஏங்கி, வாழ்க் கையில் விரக்தியுற்று போதைக்கு அடிமையாகும் இளம் ஜீவன்களை அணைத்து அன்பு செலுத்தி திருத்த விழைந்து வெற்றியும் பெறும் குழந்தை பெறாத எத்தனையோ இளம் ஜீவன்களில் நாம் காண்பதும் தாய்மையைத் தான்.

அனைத்துக்கும் மேலாக இந்த உலகம் தாய்மை யின் காலடியில் உருள்வதால்தான் பெண்மையைப் போற்றுகின்றேன் என விளம்பிய தமிழினத்தின் தனிப் பெரும் தலைவனின் கீழ் ஒன்றுபட்டு நிற்கும் ஆயிர மாயிரம் தம்பி தங்கையரும் தமது அன்புக்குரிய அண் ணனிடம் கண்டு, அனுபவித்து மகிழ்வதும் தாய்மை உணர்வையே!

★ பெருமைக்குரிய பெண்மணி - 05

★ நீளக்கொம்பன் - 12

★ ஓர் உயிர்க் குமுறல் - 16

★ பெண்களும் தமிழீழச் சட்டங்களும் - 17

★ நாற்று மேடை - 22

★ தேடலும் தெளிவும் - 26

★ எண்ணங்கள் முடமானால் - 31

★ பாக்கியம் மாமியும் பரமேசுவரியும் - 32

★ வன்முறையின் பலிக் கடாக்கள் - 34

★ கைதொழில் - 46

★ களை எடுப்பு - 48

★ நேர் காணல் - 50

★ பெண்களின் பிரச்சனைகள் - 59

★ வானக்கருமகள் -

❋ உருவாக்கம்:
ஆசிரியர் குழு

❋ ஓவியம்:
அட்டைப்பட
கருத்துருவாக்கம்
ஐ. தாமரைச்செல்வி.
ஓவியம், பயஸ்

❋ வெளியீடு:
பெண்கள்
ஆய்வு நிறுவனம்
கோம்பாவில்
புதுக்குடியிருப்பு.

❋ அச்சுப்பதிப்பு.
அட்டைப்பதிப்பு:
மாறன் பதிப்பகம்
முல்லை வீதி.
தருமபுரம்.

# பறக்கவிடு

என்னைப் பறக்கவிடு
சோகன வானத்தில்
மௌனத்தைக் கலைத்த ராகத்தில்
இசைமீட்டி
உடுதலைச் சிறகு விரித்தபடி
என்னைப் பறக்கவிடு.

வானவில்லின் அளவெடுத்து
உருவகற்கும்
மேகத்திரள்களிடையே துயின்று
எழும்புதற்கும்
நிலவை ஒற்றிவந்து
பொட்டிட்டுக் கொள்வதற்கும்
கார்காலம் பொழியும்
தூறல்களில் இறகு
நனைத்துக் குளிப்பதற்கும்
நீள்தூரம் பறக்கும்
எனது சிறகுகளைத்தா.

புள்ளிக்கோலத்தில் மிளிரும்
இறகுகள் உனக்கு விருப்பம்
அது காற்றைக் கிழித்து
உன்னிப் பறப்பதே
எனக்கு விருப்பம்
உனக்கு மட்டும் கேட்கும்
எனதுபாடல்
வானப் பரப்பெங்கும்
பரந்து விரியவேண்டும்
புள்ளினங்களின் கூட்டத்தில்

நானொளிக்க
நீ வானம் பார்த்து
அங்கலாய்த்துத் தேடுவதை
இரசித்தபடி
இன்னும் உயரப்
பறக்கப்போகிறேன்
இதோ வானம்
என்னை அழைக்கிறது.

— குறமஞ்சி —

> உலகம் தாய்மையின் காலடியில் உருள்வதால்தான்
> பெண்மையைப் போற்றுகிறேன்.
> இங்கென் தங்கைகள் படைக்கும் சாதனைகளுக்கு
> தலை நிமிர்ந்து கொள்வேன்.
>
> தேசியத்தலைவர்.



# பெருமைக்குரிய பெண்மணி

## சகோதரி நிவேதிதா (1867 - 1911)

"என்னுடைய கலப்பையைக்கொண்டு இந்தியா என்னும் நிலத்தை வெகு ஆழமாக, அதனுடைய மையத்தை எட்டும் வரைக்கும் உழப்போகின்றேன். ஒரு மின்கலப் பெட்டியிலிருந்து எந்த ஆர்ப்பாட்டமுமின்றி மிக மறைவாக ஒலி எழுவதைப் போன்று நானும் தொண்டாற்றுவேன். நானே முன்னின்று, தெருக்கள் தோறும் சுற்றிச் சென்று தீரத்துடனும் தீவிரத்துடனும் போராடுவேன். இதற்கென உயிர் துறக்கவும் தயங்கேன். இந்தியத்தாயே என் பணிகளுக்கு முதலிடமும் முடிவிடமுமாவாள்."

இந்த உணர்ச்சி மிகு வார்த்தைகளை உச்சரித்த உதடுகள் இந்திய மண்ணில் பிறந்து, இந்திய மண்ணில் பற்றுக்கொண்டு, அதற்காக தனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணிக்க விழைந்த இந்தியப் பிரசைஒருவருக்குசொந்தமானது என எண்ணாதீர்கள். உலகத்தில் எங்கோ ஒரு மூலையில் பிறந்து இனத்தால், மதத்தால் முற்றிலும் வேறுபட்ட ஒரு வெள்ளை இனப் பெண்ணுக்குரியவைதான் அவை. அதுவும் இந்திய மண்ணை ஆக்கிரமித்து அதனை ஆதிக்கம் செய்த இங்கிலாந்து தேசத்தில் இருந்தே தோன்றிய ஒரு மங்கையின் தீரமிகு வார்த்தைகள் இவை.

ஆம், தனது நாட்டின் மீது அளவுகடந்த பற்றுக்கொண்ட

இந்து யோகி, சுவாமி விவேகானந்தரின் சீடப் பெண்ணாக திகழ்ந்து இந்திய மண்ணுக்கும், மக்களுக்கும், இந்திய விடுதலைக்கும் அளப்பரிய சேவை செய்த சகோதரி நிவேதிதா தான் அவர். நிவேதிதா என்பது தன்னை நிவேதனமாக வழங்கியவர் என்ற பொருள் குறிப்பது.

லும்.'' என்று வங்க மகாகவி தாகூரினால் வியந்து போற்றப் படும் அளவிற்கு பெருமைக்குரியவர் நிவேதிதா.

''அவள் ஒரு இந்துவாக இருந்தாள் என்பதால் எமது மரியாதைக்குரியவளாகின்றாள் என்றில்லை. அவள்

## இளைஞர்களுக்கு ...—

'' உங்களுடைய உண்மையான குறிக்கோள் நாட்டின் நலனை கருதியதாக இருத்தல் வேண்டும். இலக்கியங்களை படைப்பதாலோ, அன்றி சாமர்த்தியமாக கட்டுரைகளை எழுதுவதாலோ அல்லது பேச்சாற்றலினாலோ விடுதலையை பெற்றுவிடமுடியாது. நாடு முழுவதையும் உங்கள் சொந்த நாடாக கருதி இரவும் பகலும் உழைக்க வேண்டும். உழைப்பு ஆம், இதைத்தான் நாடு எதிர்பார்க்கிறது. அறிவுக்கு உழைப்பு ஆண்மைக்கு உழைப்பு, இன்பத்திற்கும் செல்வத்திற்கும் உழைப்பு. தாய் நாடு போர்க்குரலை எழுப்பும்போது எக்காரணம் கொண்டும் உறங்கிவிடகூடாது.''

''நேரம் காலம், செல்வம் என் உயிரைக்கூட ஒருவனால் தனது தாய் நாட்டிற்காக தியாகம் செய்யமுடியும். ஆனால் நிவேதிதாவைப் போல தனது உள்ளத்தையே தனது தாய்நாடு அல்லாத ஒருவேற்று நாடு, ஒன்றிற்கு அர்ப்பணிக்க யாரால் இய

உயரிய பண்பு உள்ளவள் என்பதால்தான் நம் மரியாதைக்குரியவளாகிறாள். நம்மைப்போல் அவள் வாழ்ந்தாள் என்பதற்காக அல்ல, நம்மைக் காட்டிலும் சிறப்புற வாழ்ந்தாள் என்பதால்தான் எமது போற்றுதலுக்குரியவளாகிறாள்.'' என தாகூர், தான்

## வாழ்க்கைக் குறிப்பு:-

இயற்பெயர்;- மார்கரெட் எலிசபெத் நோபின்

பிறப்பு;- 28 . 10 . 1867

இடம்:- வடஅயர்லாந்து, டைரவுன் மாகாணம் டங்கனன் ஊர்

தந்தை தாய்:-சாமுவேல் ரிச்மன், மேரி இசபெல் ஹமில்டன்

தொழில்:- ஆசிரியத்தொழில் தொண்டு

1984 - 94 ஆசிரியத்தொழில்

1892 - சொந்தமாக பள்ளிக்கூடம் நிறுவல்.

1895 - சுவாமி விவேகானந்தரை சந்தித்தமை

1898 - இந்திய வருகை

மார்ச் - 11 கல்கத்தா நகரில் முதலாவது சொற்பொழிவு

மார்ச் - 17 அன்னை சாரதா தேவியை சந்தித்தார்

மார்ச் - 25 நிவேதிதா என்னும் பெயர் சூட்டப்பட்டமை

நவம்பர் - 13 பெண்கள் பள்ளியை திறந்தமை.

1899 - பிளேக் நோயால் பாதிக்கப்பட்ட கல்கத்தா மக்களுக்கு சேவை

1902 - ஆன்மீகப் பணியிலிருந்து விலகி தேசிய விடுதலை போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்டமை.

1906 - பஞ்சத்தால் வாடிய கிழக்கு வங்க மக்களுக்கு தொண்டு.

1911 - இறப்பு.

எழுதிய "பரிச்சயம்" என்ற நூலில் நிவேதிதாவின் பண்பை பாராட்டுமளவிற்கு அவர் சிறந்து விளங்கினார்.

வட அயர்லாந்திலுள்ள டங்கனன் என்னும் ஊரை தனது சொந்த இடமாகக்கொண்ட சகோதரி நிவேதிதாவின் இயற்பெயர் மார்கரெட் எலசபெத் நோபின் என்பதாகும். கிட்டத்தட்ட பத்து ஆண்டுகள் ஆசிரியத்தொழிலில் ஈடுபட்டு இங்கிலாந்து மண்ணுக்கு அளப்பரிய சேவையாற்றிய சகோதரி ஆன்மீக வாழ்வில் அளவற்ற நாட்டம் கொண்டதன் காரணமாக சுவாமி விவேகானந்தரி இங்கிலாந்து மண்ணில் ஆற்றிய இந்து மத சொற்பொழிவுகளால் ஈர்க்கப்பட்டு 1898ல் இந்திய மண்ணில் கால் பதித்தவர் சுவாமியின் மேல் அளவு கடந்த பற்றுக் கொண்டவர். சுவாமி, இவர் ஒரு கொள்கை வீரராக, தன்னலம், அறியாமை, பேராசை முதலிய தீமைகளை அழிக்கவே பிறவி எடுத்திருப்பதாக நம்பினார்.

சுவாமியின் வேண்டுகோளை ஏற்று 1898ல்இந்திய மண்ணில் காலடி பதித்த சகோதரி நிவேதிதா இந்திய மண்ணுக்கு ஆற்றிய தொண்டுகள் அளப்பரியவை. முதன் முதல் கல்கத்தா மக்களுக்கு "இங்கிலாந்தில் இந்திய நாட்டின் ஆன்மீகச் சிந்தனைகளின் தாக்கம்" என்ற பொருள் பற்றி அவர் பேசிய பேச்சானது

அனைவரையும் ஈர்த்தது ஸ்ரீராம கிருஷ்ணரின் துணைவியார் அன்னை சாரதாதேவியை சந்தித்தமை, சுவாமி விவேகானந்தரால் நிவேதிதா என்ற பெயர் சூட்டப்பட்டமை, கல்கத்தா நகரில் முதன் முதல் ஆற்றிய சொற்பொழிவு இந்த மூன்றையும் தனது வாழ்வில் மிகவும் முக்கியமானவை என தனது நாட்குறிப்பில் சகோதரி குறிப்பிட்டிருக்கிறார். கற்றுத்தரவோ, மக்களை கைதூக்கிவிடவோ நாம் வரவில்லை. தொண்டு செய்வதற்காகவே வந்திருக்கின்றோம் என்ற எண்ணத்தை சுவாமியின் மூலம் படிப்படியாக ஊட்டப்பட்ட நிவேதிதா, அக்குறிக்கோளுக்கேற்ப முழுமையாக பணிபுரிந்தார்.

இந்தியப் பெண்களுக்கு அறிவூட்ட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த சகோதரி 1898ல் பெண்களுக்கான பள்ளிக்கூடம் ஒன்றை ஏற்படுத்தினார். படிக்க, எழுத, ஓவியம்வரைய, பொம்மைசெய்ய, தைக்க கற்றுக்கொடுத்தார். பள்ளிக்கூடத்தை விரிவுபடுத்த நிதி சேகரிக்கும் பொருட்டு அமெரிக்கா, இங்கிலாந்து பிரான்சு நாடுகளில் இந்தியர்களைப் பற்றி அவர்கள் கொண்ட தப்பபிப்பிராயத்தை மாற்றும் வகையில் பல சொற்பொழிவுகள் ஆற்றி வெற்றியும் கண்டார். 1902ல் மீண்டும் இந்தியா வந்த இவர் ராமகிருஷ்ணர் பெண்கள் பள்ளி என்ற பெயரில் பெண்க

## நிவேதிதாவின் படைப்புக்கள்:-

★ நான் கண்ட குருதேவர்.

★ சுவாமி விவேகானந்தருடன் மேற்கொண்ட எனது பயணக் குறிப்புகள்

★ அன்னை காளி

★ சிவனும் புத்தபிரானும்

★ இந்துசமய தாலேலோ கதைகள்

★ இந்து, புத்தசமய புராணக் கதைகள்

★ இந்திய வாழ்க்கைப் பின்னல்

★ இந்திய இல்லம் பற்றிய ஆய்வுரைகள்

★ அன்பும் இறப்பும் பற்றிய இந்திய ஆய்வு

☆ சமயமும் தர்மமும்

★ நரிகளிடையே ஆட்டுக்குட்டிகள்

★ கேதாசநாத்தும் பத்ரி நாராயணரும் இமாலய பயணக்கதை

★ ஒரு யாத்திரிகனின் நாளே

★ இந்திய நாட்டின் தேசிய கல்வி

★ இந்திய வரலாற்றின் அடிசைகள்

★ நகரபரிபாலனம், தேசியம் பற்றிய கருத்தின் கட்டுரைகள்

## இந்தியப் பெண்களுக்கு ...

"உங்களுக்கேயுரிய கொள்கைகளையும், பழக்க வழக்கங்களையும்விட்டு விடாதீர்கள். உங்களுக்கேயுரிய பயபக்திக்குரிய பணிவையும், அன்பு திரம்பெற்ற இல்லறப் பிணைப்புக்களையும். மேலை நாடுகளின் நவீன நாகரிக நடையுடைபாவனைகளும், வீண் ஆடம்பரங்களும், ஆங்கிலக்கல்வியும் நாசமாக்காமல் பாதுகாத்துக்கொள்ளுங்கள்."

— சகோதரி நிவேதிதா —

ளுக்கான பள்ளிக்கூடத்தை திறந்தார். 1918ல் நிவேதிதாவின் மறைவின்பின்னா இது ஸ்ரீராமகிருஷ்ண மிசன் சகோதரி நிவேதிதா பெண்கள் பள்ளி என பெயரிடப்பட்டது.

சுவாமி விவேகனாந்தர் 1902ல் மறைந்தபின்னர் அவரது பணி இன்னமும் உறுதியுடன், விரைவுடன் நடைபோட்டது. ஆன்மீகம் என்பதையும் விட சுவாமியின் மனதில் ஆழப் பதிந்திருந்தது இந்திய நாட்டின் மீதான பக்தி தான் என்பதை உணர்ந்த சகோதரி பள்ளிக்கூடப்பணிகளை விட்டு விட்டு அதன் பின்னர் இந்திய மண்ணின் விடுதலைக்காக, அரசியல் உரிமைகளுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். தான் பிறந்த தேசத்தின் அடிமைத்தளைக்குள் ஆட்பட்டிருக்கும் இந்திய மண்ணின் விடுதலைக்காக ஆக்கிரமிப்பாளனின் மண்ணிலிருந்தே ஒரு பெண் தோன்றுவது ஒரு ஆச்சரியமூட்டும் நிகழ்வுதான். தனது தேசத்தின் நியாயமற்ற சட்டங்களுக்காக, இவர் வதாடினார். கட்டுரைகள் பல எழுதினார் சொற்பொழிவுகளை ஆற்றினார் இவரது கருத்துக்களை அனைவரும் போற்றினாலும் குறிப்பாக இளைஞர் சமுதாயத்தின் நன்மதிப்புக்குரியவராக இவர் விளங்கினார். அறிவியல் மேதை டாக்டர் ஜகதிச சந்திரபோஸ், வங்கமகாகவி ரவீந்திரநாத்தாகூர், தேசியத் தலைவர்களான சுரேந்திரநாத் பானர்ஜி, கோகலே, ஆர்-சி. தத்தா, வியின் சந்தி

## கலைஞர்களுக்கு ——

"இந்நாட்டின் தேசியக் கலைக்கு புத்துயிர் அளிக்க வேண்டும் என்பது தான் என் நெடுநாளைய கனவு இந்தியா தான் இழந்த பண்டைக்கலைகளை என்று மீண்டும் பெறுகின்றதோ அப்பொன்னாளே இந்நாடு வலிமையுறும் நன்னாளாகும்."

—சகோதரி நிவேதிதா—

**இந்திய மக்களுக்கு—**

" நாம் எல்லோரும் ஒரே குலம். நம்மைப் பிளவுபடுத்தும் சக்திகள் நம்மை எதுவும் செய்யமுடியாது நாம் அனைவரும் ஒரு தாயின் மக்கள், நம்மிடையே காணப்படும் பகை உணர்ச்சிகள் ! வெறும் பொய்த் தோற்றமே. இதனை இந்திய மக்கள் 10 மணித் ளிகள் எண்ணிப் பார்ப்பார்களாயின் ஒற்றுமை விரைவில் ஏற்பட்டுவிடும். இந்த எண்ணம் தோற்றுவிக்கும் ஆற்றலை இவ்வளவு என அளவிட்டுக் கூறமுடியாது ."

—சகோதரி நிவேதிதா —

மில், ஸ்ரீ அரவிந்தகோசகர், மகாத்மா காந்தி, திலகர் போன்றோர் அவர்மீது பெருமதிப்பு கொண்டிருந்தனர். அதே போன்று இளைஞர் சமுதாயத்தில் இருந்து மகாகவி சுப்பிரமணிய பாரதி, பொருளாதார நிபுணராய் சர்கார், கலைஞர்கள் நந்தலால் போஸ். அஜித் உல் தார், சுரேந்திரநாத்கங்கூனி போன்றோர் இவர்பின் ஈர்ப்புக் கொண்டவரில் சிலர்.

"நடுத்தர உயரமும், சுடர் வீடும் வெளிர் நீலக்கண்களும் பொன்னிறக் கூந்தலும், தீச்சுடரின் நிறமும், கவின் மிகு புன்சிரிப்பும் கொண்ட இந்தப்பெண் தனது 44 வது வயதில் டார்ஜிலிங்கில் உள்ள போஸ் குடும்பத்தவரின் இல்லத்தில் இவ்வுலகை விட்டு நீங்கினார்.

"அன்னையின் உள்ளமும், வீரனின் பெருவிருப்பும், தென்றலின் இனிமையும், தெவிட்டாத தெய்வீக அழகும் ஆற்றலும்' ஆரியப் பீடிகையின் சுடர்வீட்டு பிரகாசிக்கும் இப்பண்புகள் அனைத்தும் இவைபோன்ற பண்புகள் பிறவும் இதுவரை யாரும் கனவு கண்டிராத

" நீங்கள் இந்திய வாழ்க்கையை சித்தரிக்கும் படங்களையே வரைய வேண்டும். ஸ்ரீராமன் சிவபெருமான், புத்தபகவான், பீஷ்மர், தருமர். சிவாஜிமன்னன், பிரதாப்ராணா போன்றோரின் படங்களை தீட்டினால் இவை இந்திய உணர்வை தட்டி எழுப்பி விடுமே? இந்தியா எப்பேர்ப்பட்ட நாடு என்பதையும் உலகிற்கு எடுத்துக்காட்டி விடும். "

— சகோதரி நிவேதிதை —

அளவிற்கு உன்னிடம் பொலி வதாக. இந்திய நாட்டின் வருங்கால மகனுக்கு தலை வியாக, பணி'யாளராக, நண்பராக இவை அனைத் தும் இணைந்த ஓர் உன்னத இலட்சிய வடிவமாக நீ திக ழ்வாயாக''

இந்திய நாட்டின் மீது தணி யாத பற்றும் இந்திய ஏழைகள் மீது அளப்பரிய பாசமும் கொண் ட இந்து யோகி சுவாமி விவே கானந்தரிடமிருந்து இந்திய தேசத்திற்காக தனது உடல், பொருள், ஆவி மட்டுமன்றி தனது உள்ளத்தையே அர்ப்ப ணித்தசகோதரி நிவேதிதாவிற்கு வழங்கப்பட்டவை தான் இந்த அருளாசிகள். △


# தீன்சுவை வெதுப்பகம்

புதுக்குடியிருப்பு

வெதுப்பி (பாண்) - பனிஸ்

இனிப்பு வெதுப்பி (பட்டர் பாண்)

சகல விதமான

கேக் வகைகள்

பிஸ்கட் வகைகள்

பிறந்த நாள் /திருமண நாள்

ஐசிங் கேக்

அழகாகவும் தரமாகவும் சுவைமிக்கதாகவும் பெற்றுக்கொள்ள நம்பிக்கையான

ஓரே இடம்

ஓடர்கள் குறித்த தவணையில் பெற்றுக்கொள்ளலாம

THEEASUVAI VETHUPPAHAM

PUTHUKKUDIYIRUPPU

# நிலைக்கொம்பனை



பிரேமினி

கதவு திறந்திருக்கும். எட்டிப்பார்ப்பார். இலாம்புதணிந்து எரிந்தபடி இருக்கும். போர்வையால் இழுத்து மூடியபடி படுத்திருப்பேன். அவருக்கான அறையின் மேசையில் பைல்கள் அடுக்கப்பட்டிருக்கும். கொஞ்சம் கூனலாய் வளைந்த சாயலில் சரிந்து சிகரெட் ஒன்றை விரல்கள் நடுவில் பிடித்து இழுத்து ஊதிய படி அலுவலன் ஒருவரை அழைத்து அதிகாரத்தோடு உரைப்பாரே அதுபோல அல்லது இன்னும் மோசமாக புத்தகத்தை புரட்டிப் படிக்குமாறு அதட்டுவார். அப்போதும் நான் அசைந்திரேன். அவர் வெளியில் போவது தெரியும். இருமியபடி துப்புவார்.

அப்போது குறண்டலில் இருந்து நிமிர்ந்து போர்வையை விலக்குவேன். படுத்திருந்தபடியே கை இரண்டையும் முன்நோக்கி உதைத்து உலைவெடுப்பேன். எழுந்திருப்பேன். என் மேசையில் மணி முட்கள் புலர்வாய் ஐந்தைக் காட்டும். வான் அலைப் பெட்டியின் அழுத்தியை அழுத்துவேன் இரைச்சல்களை ஊதும் திருகியை அசைத்துக்கொண்டிருப்பேன். கன்னடம் அல்லது கிந்தி, மலையாளம் இல்லையெனில் தெலுங்கு, இப்படி ஏதாவது ஒன்று மெலிதாய் இனிதாய் படித்தபடி திறுத்திவிடுவேன். அப்படியே லயித்தபடி அமர்ந்து இருப்பேன். ஜில் எனக் குளிர் காற்றுப்படுவதாய் இசை உலுப்பும்.

அவர் உள்ளே வருவார். அவர் வருவதை நான் கொஞ்சமும் அறிந்திரேன். அப்போது பக்கத்தில் நின்று புறுபுறுப்பார். சிகரெட் வெடில் அடிக்கும். அழுத்தியை சுட்டு விரலால் மிதித்து நிறுத்துவேன். மறுபடி ஏதோ புறுபுறுப்பார். கதவை தற்செயலாக தட்டியபடி வெளியில் போவது எனக்கு தெரியும் ஆனால் திரும்பிப் பார்க்கேன். மறுபடி அழுத்திப்போடுவேன். அதிலே அந்த இசை முடிந்திருக்கும். மறுபடி திருதவேன். அதற்குப் பின் அவர் எனது அறைப்பக்கம் வரவே மாட்டார்.

இன்று பாடசாலை செல்வதில்லை என்பது எனக்குள் தீர்மானமாகும். அவர் அம்மாவிடம் விடைப்பெற்றுப் புறப்படுவார். இசை முடியும்வரை காத்திருந்து எழுந்து வெளியில் வருவேன். சூரியச் சிடுக்கன் சிரித்துக் கொண்டிருப்பான். அம்மாவின் பார்வை பள்ளிக்குப் போகவில்லையா என வினவும். நான் எதுவும் பேச மாட்டேன். மாட்டுக் கொட்டிலுக்குள் அசையிட்டபடி காளைகள் படுத்திருக்கும் என்னைக்கண்டதும் நீளக்கொம்பன் எழுந்து விடும். கட்டைக்கொம்பன் கொஞ்சம் சாக்கன். நான் போய் தட்டினாலும் இன்னும் கொஞ்சம் தட்டட்டும் என்று படுத்திருக்கும்.

சற்று ஊன்றித்தட்டுவேன் எழுந்துநின்று சாணம்போடத்தொடங் கும். இப்பொழுது கயிற்றை அவிழ்த்து தோட்டப்பக்கம் போகத் தொடங்குவேன். முயற்செவி போல வெங்காய மடல் அழகாய் இருக்கும். அதற்கு பக்கத்து வயலை உழ ஆரம்பிப்பேன் மிக வும் நேர்த்தியாக கலப்பை போய்க் கொண்டிருக்கும். எனது பேனாவைப்போலதான். கலப்பையும் அற்புதமானது. கம்பைச் சுழற்றுவேன். அனால் அடிக்க மாட்டேன் என்பது கொம்ப னுக்கும் மற்றதிற்கும் நன்கு தெரியும். குஞ்சம் போல் அழகாய் நீண்ட வால்கள் அசையும். இலையான் அந்த விசுக்கலில் பட்டு தப்பிப்போகும். உழுது முடியும். தோட்டக்கிணற்றில் நீர் அள்ளி வைப்பேன். கொஞ்சமாய்த்தான் நீர் குடிக்கும். பின்பு கொண்டு போய் பச்சைப்புல்லில் கட்டிவிடுவேன்.

உணவு போட்டு மூடியிருக்கும். அதுக்குள்ளே முட்டைப் பொரியல் சமகமக்கும். உண்டு விட்டு மறுபடியும் புத்தகத்தை தூக்கிக் கொண்டு தோட்டத்திற்கு போய் விடுவேன். அம்மா எது வும் பேசமாட்டாள். தோட்டத்திற்குள்ளே கொட்டில் ஒன்று இருக்கிறது. அதற்குள் எங்கள் வேலைக்காரன் படுப்பானே. அந் தப் பாயை எடுத்துக்கொண்டு கூளா மரத்தடிக்குப்போய் பாயை விரித்து, இருந்தபடி படிக்கத் தொடங்குவேன். வெய்யோன் ஏறிக் கொண்டிருப்பான். மைனா அல்லது புறா குறுகுறுக்கும். படிக்கும் போது அது நன்றாய் இருக்கும். வெய்யிலில் வியர்த்து இராசமுவின் கறுப்பு மேல் பளபளக்க அவன் இன்னும் கொத் திக் கொண்டிருப்பான். நான் அவனை அழைப்பேன். நிமிர்ந்து பார்ப்பான். ஒரு மேகம் சூரியனை மறைத்து அவன் மேலுக்கு நிழல் கொடுக்கும். அது அறுந்துபோக கொத்தத் தொடங்கு வான். சற்று நேரம் கழித்து நான் மறுபடி அவனை அழைப் பேன். எனக்கு கிட்ட வந்து அமர்வான். தண்ணீர் குடிக்குமாறு எனது செம்பைக் காட்டுவேன் அவன் முழுவதும் குடிப்பான். இருவரும் கதைப்போம். எனக்கு வயலைப்பிடிக்கும், நீர் பிடிக் கும். வயற்காற்றுப்பிடிக்கும். மழையில் நனைவது கூடப்பிடிக்கும் என்பேன். அவன சிரிப்பான். ஒரு பயிர் காலையில் பனிப்பொழு தில் உற்சாகப்படுமே அப்படி அதுபோல அழகாக இருக்கும். இடையில் அவன் கொத்தப் புறப்படுவான்.

அப்புறம் மதிய உணவை மூடிப்போம். மறுபடி வந்து கொம்பனை அவிழ்த்து நிழலில் கட்டிவிட்டு மறுபடி படிக்க தொடங்குவேன். அப்படியே அவன் கொத்த அல்லது நீர்பாய்ச்ச தொடங்குவான்.

இப்படியே. எனக்கு உயர் தரச் சித்தி கிடைத்தது. அப்பாடா அவ்வளவும் போதும் என்று கூறினார். அவர் இப்போது என்னைப்பார்த்து சிறு புன்னகை உதிக்க நினைப்பார். நான் பார்ப்பதில்லை. அவர் வரும் ஓசை கேட்டால் தோட்டப்பக்கம் போவேன். தோட்டம் மறுபோகச் செய்கைக்கு ஆயத்தமாகியது. அவன் ஏதோ செய்துகொண்டே இருப்பான். அப்பாவியான அவனிடம் இப்போது ஒரு றபர்சீற் இருந்தது. அதை எடுத்துக்கொண்டுபோய் விரித்துப் படுத்துவிடுவேன். அப்போதுதான் எனது மாமா தெருவில் சுடப்பட்டார். எமது நண்பனை துருப்புக்கள் கொண்டு போயினர். அவனைப்பற்றி தகவல் ஏதும் இதுவரை இல்லை.

சூரியன் மறைகின்ற கருக்கற் பொழுதில் எமது வீட்டை விட்டு ஓடிவந்தோம். இரண்டு மூன்று உரப்பையினுள் அடங்கிய வீட்டுச் சாமான்கள், பழையதும் புதிதுமான உடுப்புக்கள் அடங்கிய பயணப்பொதியுடன் நாங்கள் வந்தோம். கைகளிலும் தலையிலும் இருந்த பொதிகளின் கனத்தைவிட மனம் கனத்துக்கிடந்தது.

நேற்றுக் கிபிர் விமானங்கள் வீட்டுக்குமேலால் சுற்றின. அம்மா பயப்பிராந்தியோடு உடலைக்குறுக்கி பாதி உடைந்து போன நிலையில் இருக்கும் எமது தற்போதைய வீட்டின் சுவரோரம் நின்றார். படியில் இருந்த என்னை உள்ளுக்கு வருமாறு கெஞ்சினார். தூரத்தில் 'கும் கும்' என அதிர்ந்து சத்தம் எழுந்தது. கரிய புகைக்குவியல் மேலெழுந்து, வெடிமருந்தின் அருவருக்கத்தக்க மணம் காற்றோடு வந்தது. மனதின் அடியாளத்தில் அக்கினியொன்று கிளர்ந்தெழுந்தது.

இப்போது தோட்டப்பக்கம் எங்கும் வெறும் தரிசாயிருக்கும். ஒரு மயானத்தின் தோற்றமாய் அது மாறிப்போயிருக்கும். கட்டைக்கொம்பன் சிங்கள இராணுவத்தின் எறிகணையொன்றிற்குப் பலியாகியிருக்கலாம். நீளக்கொம்பன் துணையின்றி பசியோடு எங்கும் அலைந்து திரியலாம்.

வெள்ளைக் கொம்பன், கலப்பை, வேனா, ஒரு புத்தகம், வயல், பயிர் எல்லாவற்றையும் நேசித்தேன். வேலைக்காரனின் உப்புப் பூவைப்பார்த்துக் கண்குளிர்வேன். □

# ஓர் உயிர்க் குமுறல்

பனி கவியும்
முற்றத்துப் பாயில்
முகம் அழுந்தத் தூங்கும்
என் சிறு பூவே
வற்றிய முலையில்
உதடு பொருத்தி
பசியாறா எழுந் தவிப்பில்
களைத்துறங்கும் போதும்
என் கண்ணில்
நீர் வற்றிப போயாச்சு.
உன் மென் உடல்நோவ
அழும் நெஞ்சை
பொறுக்கா
துடித்தெழும் மனதின்
ஓலங்கள,
பொங்கியெழும் எரிமலையின்
பிறிடலாய்க் கனலும்
நேற்றைய பொழுதின்
கடல் அலைகள்
அடித்தழும் இரவொன்றின்
நீட்சியில்
உன் தந்தை உயிர்
இனவாதம் குடித்தாயிற்று.
புயல் எந்தன்
வாசல் நின்றாடிய போதும்
நெடிதாய்க் கொடும்பொழுதின்
கனமறியாச் சிறு பூவே
நீ துயில்வாய்.

- பூம்பாவை

# பெண்களும் தமிழீழ சட்டங்களும்

(உண்மைச்சம்பவம்)

இரவு பத்து மணிக்கு மேலான தும் ஓரளவு கல்யாணச் சந்தடி அடங்கியது. வீடுகளுக்கு செல்வோர் சென்று விட்டனர். தொலைவிலிருந்து வந்தோர் பந்தலுக்குள்ளும் வீட்டுக்குள்ளுமாக படுத்துவிட்டனர், இன்னும் அவர்கள் மட்டும் விழித்திருந்தனர்.

''மீரா — இஞ்ச பாருமப்பா ...''

''... — —''

''ரோட்டால போகைக்க எவ்வளவு ஸ்மாட்டா போவீர் — இப்ப என்ன வந்தது ம் - — மீரா..... மீரா ......ச்ச—''

''என்ன இப்ப....—''

''என்ன இப்பவோ......எங்களுக்கு இனி ச்சிறக்கிறது இன்னும் அஞ்சு மணித்தியாலம். அதுக்குள்ள நாங்கள் மனம் விட்டுப் பேச வேணும் ....''

'' ம் ...... ....''

''நீர் வாயே திறவாமல் இருந்தா ......''

'' சரி—... 'திறக்கிறன்......''

'' இஞ்சேரும் உமக்கு என்னைப் பிடிச்சிருக்கே''

''என்னைக் கேட்டுட்டுத்தான் கலியாணம் ஒழுங்கு பண்ணினவை''

'' அப்படியெண்டா.....''

'' அப்படியெண்டா..... நான் விருப்பம் எண்டு சொன்னதால தான்''

'' ச்சி....—(சிரிப்பு) நான் வேற ஏதோ நினைச்சிட்டன்''

இப்படி பேசிக்கொண்டே நேரம் கழிந்து கொண்டிருந்தது

"மெய்யேப்பா நீர் இதுக்கு முதல் .... 'சொறி' உம்மை ஆரும் கேட்டு வரயில்லயோ ....."

"இதென்ன கேள்வி– அக்கா முடிச்சபிறகு என்னக்கேட்டு சில சம்பந்தங்கள் வந்தது தான் ..... எல்லாம் குழம்பீட்டுது."

"ஏன்?"

"சீதனம், உத்தியோகம், சாதகம், எண்டு பல காரணமுந் தான்,"

"இப்ப ...."

"இப்ப...... இவருக்கு...... எல்லாம் பொருந்திட்டுது,"

"உடன ஓமெண்டிட்டீர்"

"இல்ல......சாதகப் பொருத்தம் இதுபோல மூன்னும் பொருந்தினதுதான், சீதனம் கூட கேட்டதால ..... தான் அதிகம் குழம்பினது."

"ஏனப்பா இப்ப நான் கேட்டதை தந்தநீங்க தானே ....."

"ஓ .... ஏனெண்டா எனக்குப்பிறகு நாலு சகோதரங்கள் இருக்கு, இரண்டு பெண், இனி தம்பி உழைச்சு அவையக் கரை சேர்க்கோணும், நானும் இருந்தா சும்மா வயது ஏறிக் கொண்டு போகும்,"

"ஏறினாலும் நீர் நல்ல வடிவப்பா. முதலே தெரிஞ்சா சும்மாவே கொத்திக் கொண்டு போயிருப்பன்."

"புளுகாதையுங்கோ இப்பவும் சும்மா சேய்யேல்ல ..... ஒண்டரை லச்சமும் வீடு வளவும் வந்திருக்கு ....."

"அதெல்லாம் கிடக்கட்டும் இப்பயேன் அதைப்பற்றி பேசினீர் ..... உமக்கு நினைவிருக்கே, முந்தி நீங்கள் பழைய வீட்டில இருக்கேக்க நான் ரமேசோட ஒருக்கா அங்க வந்தனான்."

## தமயந்தி

"எனக்கு நினைவில்ல ... ரமேசந்தானை எனக்கு பிடிக்காது. அதால தானே ... நாங்கள் வீடுமாறினனாங்கள்."

"ஏன் ரமேஷ் உங்கட அக்கான்ர மிஸ்டர் தானே ... கலியாணத்துக்கும் வந்தவர் தானே."

"ஓ ... ஓ ..... சவியன்...... நாங்கள் ஒரு வீட்டில இருந்த நேரம், அக்காட்ட ஒரு அலுவலா யோனநான், இரவு – அவர் இருட்டுக்க நிண்டு போட்டு நான் வர ... கையைப்பிடிச்சு இழுத்தவர் ........"

"அ ... அவன் மனதில் அதிர்வு. நான் கையை உதறிப் போட்டு, ஏசிப்போட்டு வந்திட்டன் பேந்து கதைக்கிறயில்ல." அவன் மௌனமானான்.

'' ஏனப்பா பேசாமக் கிடக்கி றியள் ——

'' ம்...... விளக்க நூரப்பா நித்திரை வருகுது.''

★ ★ ★

திருமணமாகியபின் வீட்டு விருந்துகளுக்கு இருவரும் மகிழ்ச் சியாகப் போய்வந்தனர். மாப் பிள்ளை பகுதி உறவினர் வீடு கள் முடிந்து பெண்வீட்டு உற வினர், முதலில் அக்கா வீடு —— இருவரும் குளித்து நல்ல ஆடை கள் அணிந்து புறப்பட்டனர்.

'' என்னப்பா இண்டைக்கு நீலப்பட்டு... ''

'' இது அக்கா எடுத்து தந்தவ .. ''

'' அக்காவோ — அத்தா ளோ ..... ''

'' அக்காவெண்டா என்ன ? அத்தாளெண்டா என்ன ? நீங்களும் நானும் வேறையே !'' அவன் கைதட்டிச் சிரித்தான். '' அருமையான உவமை. ''

அக்கா வாசலிலேயே காத்தி ருந்தாள். கலகலப்பாக வர வேற்று உள்ளே அழைத்துச் சென்றாள். அருகருகான நாற் காலிகளில் அவனும் அவளும் அமர்ந்தனர். உள்ளே இருந்து ரமேஸ் வந்தான்.

'' ஹலோ .. ராஜ் .. எப்படி புதுமனைவி ''

சட்டென்று கதிரையை தூக்கி படீ ரென்று திருப்பிப் போட் டாள் மீரா .... ரமேசுக்கு முதுகைக் காட்டியவாறே அமர்ந்தாள்.

'' ராஜா மௌனமானான். அதிகம் பேசாமல் விருந்தை முடித்துக் கொண்டு வீடுதிரும்பி னர்.

அவனால் மனைவியை எதிர் நோக்க முடியவில்லை. மேகம் போன்ற அவள் கூந்தல் அவ னுக்கு இருளாக இருந்தது. அழகிய அவள் கண்களில் நஞ்சு பரவியிருப்பதாகத் தெரிந்தது. தன்னுடன் அவள் கொஞ்சிப் பேசுவதெல்லாம் பசப்பு வார்த் தைகளாகப் பட்டது. அவன் மனதில் உள்ள எண்ணங்களைப் புரிந்து கொள்ளாமல் தேநீர் ஊற்றி எடுத்து வந்தாள் மீரா .....

தேநீரையும் அவளையும் மாறி மாறிப் பார்த்தான் ராஜா ....

'' என்ன... ? அப்பிடிப்பாக்கி றியள்; ''

கொஞ்சலாக கேட்டாள் மீரா.

''என்னடி நடிக்கிறாய் - மன சில அவன் -மற்றதுக்கு நான்.''

''என்ன சொல்லுறியள் '' அவள் குரல் உயர்ந்தது. அவன் கை உயர்ந்தது.

நீ ஏமாத்திப்போட்டாயடி அவன்..... அவனை நீ —''

''சீ ஏனிப்பிடி கதைக்கிறீயள்.''

''ம்... கதைக்கிறனோ... உங்களுக்குள்ள கரவில்லாட்டி ஏன்ரி ரெண்டு பேரும் திரும்பி இருந்தனீங்கள்...''

''எனக்கு அவன பிடிக்காது.'' அவள் அழுதாள். அவன் தன் ;ஆத்திரம் திருமட்டும் அவளை அடித்தான். பின் படுக்கையில் விழுந்து உறங்கிப் போனான். அவள் அழுது முடிந்ததும் எழுந்து உள்ளே போனாள். அவன் களங்கமற்று உறங்கிக் கொண்டிருந்தான். அவனுடைய அந்த குழந்தைத் தனமான முகம், சற்றுமுன் நடந்த எதுவுமே தனக்குத் தெரியாது என்பது போல அமைதியாக இருந்தது. மீரா புன்னகைத்தாள்.

''அவனுக்குத்தான் என்மீது எவ்வளவு அன்பு. இந்த அன்பு தானே என்னை தனக்குமட்டுமே உரியவளாக எண்ணும். அந்த எண்ணம்தானே – என்னை மற்றவன் யாரும் உள்ளத்தால் கூட நினைக்கக் கூடாது என கருதுகிறது. அதை அவரால் தாங்க முடியவில்லை. அதனாலேயே கோபம் வருகிறது. என்னை தன் சொத்து- தனக்கு மட்டுமேயான சொத்து என்ற எண்ணம் எவ்வளவு உன்னதமானது. என் கணவன் எனக்கு மட்டும்தான்.'' அவள்.. இந்த நினைவுகளோடு அவனை அணைத்துப் படுத்துக் கொண்டாள். அவனும் அவளோடு ஒன்றிப்போனான். சில தினங்கள் கடந்தன. ஓர் நாள் அலுவலகம் விட்டு அவன் வந்த போது நான்கு வயதுப் சிறுமியும் ஒரு பத்து வயதுச் பையனும் நின்றார்கள். இவன் வந்ததும் அவர்கள்,

'' போறம் சித்தி '' என்றவாறே போய்விட்டனர்.

'' ஆர் ''

'' எங்கட பக்கத்து வீட்டுப் பிள்ளையள் ''

'' என்னவாம் ''

'' அத்தானோட கோயிலுக்கு போனவையாம். பொங்கல் கொணந்தவை ''

'' எங்க அவன் ''

'' ஆர் ''

'' கொத்தான்... ''

'' அவர் கடையடியில நிக்குறனெண்டு போட்டார் ''

'' அப்ப நீ போகயில்லயே ''

'' அவர் எனக்கு சொல்லயில்ல ...... பின் ... ''

''பொத்தடி வாய்'' அவன் கை அவள் கன்னத்தை மோதித் தள்ளியது. சரமாரியாக விழுந்த அடிகளின் பின் - அவன் சாப்பிடாமலே உறங்க - இவன்

அழுது முடிந்து அவனை அணைத்து சமாதானமாக்கிசாப்பிட வைத்தான். அல்லது அவன் அவளை சமாதானமாக்கி சாப்பிட வைப்பான்.

தவணைகள் நெருங்கின. அடிக்கடி அடி, உதை, சுடுசொற்கள். அவனது வெறி நாளாந்தம் அதிகரித்தது, அவளை கட்டிவைத்தல். சிகரட்டால் சுடல் என நீண்டது எவ்வளவு அன்பாக, நடந்தாலும்,

''என்னடி இண்டைக்கு உருகுறாய் அவன் மாட்டனெண்டு போட்டானே ...''

வன்மையாக கதைத்தாலும்,

''என்னடி என்னைப் பிடிக்கயில்லயே அவனிலதான் பற்று முழுக்க ....''

''போடி எங்கயாவது போடி எனக்கு உன்னைப் பாக்கேலாமக்கிடக்கு. நிண்டியெண்டா நான் கொலைகாரனாக போவன்.''

குழறினான் அவள் வேறு வழியில்லாமல் விவாகரத்துக் கோரினான்.

''அவன் பிழையோ சரியோ எனக்குத் தெரியாது .. ஆனா எனக்கு அவன் முதல் நாள் சொன்ன கதையோட மனம் விட்டிட்டுது, விருந்துக்கு போன இடத்தில திரும்பி இருந்ததும் அவனில எனக்கு சந்தேகத்தை தந்திட்டுது, எனக்கு அவனோட வாழ ஏலாது.''

(ஆனால் இவ்வளவுகாலமும் அவனோடு வாழ்ந்தவர்- 3 வருடம்)

''வேண்டாம்.சந்தேகப்படுறார் எண்டு நான் முதல் நினைக்கேல்ல. உண்மையா சந்தேகமெண்டா அவரோட வாழுறதில அர்த்தமில்ல ...'' மீரா விலகிகொள்ள முடிவெடுத்தாள் அவளுடைய சீதனம் திரும்ப பெறப்பட்டது. கேட்டம் பங்கிடப்பட்டது. தமிழ் சட்டம் முறைப்படி விவாகரத்தை வழங்கியது. □


நங்கையர் விரும்பும் நவநாகரிக
வடிவங்களில் குறித்த தவணையில்
நகைகளை ஓடர்மூலம்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

**மாருதி நகைமாளிகை**

**நாச்சிக்குடா சந்தி, முழங்காவில்.**

# நா
# ற்
# று
# மே
# டை

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒதுக்குப்புறக் கிராமங்களில் ஒன்று செம்மலை. ஸ்ரீலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்கு ஆளாகியும் கடற்படையாளரின் பீரங்கித்தாக்குதல்கள் என்பவற்றிற்கு இலக்காகியும் அடிக்கடி அக்கிராம மக்கள்) இடம் பெயர்ந்து அயற்கிராமங்களுக்



குப் போனார்கள். இராணுவம் கிராமத்திலிருந்து பின்வாங்கிப் போக மீளவும் தங்கள் கிராமத்திற்கு போவார்கள்.

இடிபாடுண்ட வீடுகள், குழி தோண்டப்பட்ட வீதிகள், மீண்டும் உயிர்ப்புப்பெறும். இராணுவ

ஆக்கிரமிப்புக்கு அவர்களது பாடசாலையும் தப்பவில்லை. மாணவர்கள் இடம்பெயர்ந்து சென்று முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியிலும், தண்ணீரூற்றிலுள்ள பாடசாலையிலும் கல்வி கற்றனர். பின்பு மீளவும் தங்கள் பாடசாலைக்கு சென்று அதனை சீரமைத்து கல்வி கற்றனர்.

செம்மலை மகாவித்தியாலயம் இத்தகைய இராணுவ அழுத்தங்களுக்கு ஆளாகியும் நெருக்கடிகளுக்கு உட்பட்டும் இருக்கிறது. பின்தங்கிய கிராமம் என்றாலும் கூட இராணுவ அழுத்தங்களுக்கு மத்தியிலும் இப்பாடசாலை நிமிர்ந்து நிற்கிறது என்றால்,

## பாலசுப்பிரமணியம் லக்ஸனா
## 1982 - 05 - 22
செம்மலை மகா வித்தியாலயம்
ஆண்டு - 11

அதில் கல்வி கற்கும் மாணவர்களின் முன்னேற்றமும் ஆசிரியர்கள் அதிபரின் செயற்பாடும் அவ்வூர் மக்களின் முயற்சியுமே யாகும்.

இந்தவகையில் செம்மலை மகாவித்தியாலயத்திற்கு எமது நாற்று மேடைக்கான மாணவர் ஒருவரை இனங்காணுவதற்கு சென்றோம். அவ்வூர் மக்களே பெரும்பாலும் கல்வி கற்கின்ற சிறிய பாடசாலையாக அது இருக்கிறது. அப்பாடசாலையில் கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்கள், அதிபர், மற்றும் மாணவர்கள், சிறந்த மாணவி என்று பேசப்படுகின்ற செல்வி லக்ஷனா பாலசுப்பிரமணியம் அவர்களை எம் நாற்று வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துகின்றோம்.

இன்றைய நாற்றுமேடையில் வலம் வருபவரான லக்ஷனா பாலசுப்பிரமணியம் துடிதுடிப்பான, கலகலப்பான சிறுமி. அந்த வயதுக்கே உரிய குழந்தைத்தனத்தையும் மீறி தெரின்ற பொறுப்புணர்ச்சியும் செயல்வேகமும் அவரது பேச்சுக்களிலும் சிந்தனைகளிலும் வெளிப்பட்டது. அவருடனான உரையாடலை இங்கு உங்களுக்குத்தருகிறோம். "ஆண்டு பதினொன்றிற் கல்விபயிலும் நான், எனது ஆரம்பக் கல்வியிலிருந்து இன்றுவரை செம்மலை மகா வித்தியாலயத்திலேயே கல்வி பயில்கிறேன். எனது சொந்தக் கிராமமும் செம்மலைதான். எனது அப்பா ஒரு அரச பணியாளர். மலேரியா தெளிகருவி இயக்குனராகப் பணியாற்றுகிறார். எனக்கு இரண்டு சகோதரர்கள் இருக்கிறார்கள்" எனக் கூறும் லக்ஷனா அனைத்துப் பாடங்களிலும் அவர்கள் வகுப்பில் முதல் மாணவராகத் திகழ்கிறார்.

தான் விஞ்ஞான பாடத்தை விரும்பிப்படிப்பதற்காகவும் க. பொ. த. உயர்தரப்பிரிவில் உயிரியல் விஞ்ஞானத்தையே தெரிவு

செய்யப்போவதாகக் கூறும் லக்ஸனாவிடம் நீண்ட எதிர்கால லக்கனவு இருந்ததை அவரது கூற்றுக்களில் அறியக்கூடியதாக இருந்தது.

செம்மலைக்கிராமம் பின்தங்கியது. பெரியளவிலான வைத்திய வசதிகளோ வைத்தியர்களோ இல்லை. இந்நிலை எதிர்காலத்தில் ஒரு வைத்தியராக வந்து வைத்தியத்தொழிலையே செய்வதற்கு மனதில் விருப்பம் இருக்கிறது என்று கூறிய லக்ஸனாவின் முகம் ஒருவித கவலையையும் தயக்கத்தையும் காட்டியது. அந்த விருப்பத்தை நிறைவேற்றும் அளவிற்கு எமது பாடசாலையில் உயிரியல் விஞ்ஞானம் படிப்பதற்கான வசதிகள் இல்லை. ஆய்வுகூட வசதிகளும் இல்லை என்பது எமக்கு தெரிய வந்தபோது அவரின் கவலைக்கான காரணம் புரிந்தது.

பாடசாலையில் நடக்கின்ற நிகழ்ச்சிகள் விழாக்கள் என்பவற்றில் லக்ஸனாவின் பங்கு தவறாது இடம்பெறும் என்கிறார் இவரது ஆசிரியர். நிகழ்ச்சிகளுக்கான ஆயத்தங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது அதனை ஒழுங்குபடுத்தல், வேலைகள் கொடுக்கப்படாமல் இருந்தாலும் கூட முன்னின்று இந்த வேலையை நான் செய்கிறேன், தாருங்கள் என்று துடிப்புடன் நிற்பவர் என்றும் இவரைப்பற்றி மேலும் அவ்வாசிரியர் கூறினார்.

எந்த வேலையையும் பொறுப்பாக செய்யும்படி நம்பி ஒப்படைக்கலாம் என்கிறார் இவரது பாடசாலை அதிபர். எமது பாடசாலையானது வேறு பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளுக்கு நிகழ்ச்சிகளைக் கொண்டு செல்லும் போது எடுத்துச்செல்லப்படுகின்ற பொருட்கள் லக்ஸனாவின் கையில் ஒப்படைக்கப்படும்போது அது தவறாது ஒழுங்காக வந்து சேரும் என்கிறார் அதிபர். இத்தகைய பண்புகளே இவரை மாணவ தலைவியாக நியமிக்க தூண்டியது என்கிறார்.

லக்ஸனா விளையாட்டுத்துறையிலும் சளைத்தவரில்லை. அவர் பங்குபற்றி பரிசுகளைத் தட்டிக்கொண்ட விளையாட்டுக்கள் பற்றிக் கேட்டபோது .....

வழமையாக நூறு மீற்றர், இருநூறுமீற்றர், நானூறு மீற்றர் ஓட்டப்போட்டிகளில் முதலாவதாக வருவேன். பாடசாலை ரீதியிலும் கோட்ட ரீதியிலும் ஓட்டப் போட்டிகளில் சம்பியனான இவர் பாடசாலையில் ஒரு சட்டவீராங்கனை என்பது குறிப்பிடத்தக்கது. பல வெற்றிக் கேடயங்களை தனதாக்கியவராவார்.

கலைத்துறையில் உங்கள் ஈடுபாடுபற்றிக் கேட்டபோது ......
ஆங்கில, தமிழ்த்தினப்போட்டிகளில் தவறாது பங்குபற்றுவதாகவும் 1997ல் நடைபெற்ற தமிழ்த்தினப்போட்டியில் கவி

தைப்போட்டியில் முதலாம் இடத்தையும் ஆங்கிலக் கவிதை வாசிப்பில் முதலாம் இடத்தையும் பெற்றுக் கொண்டதாகவும் குறிப்பிட்டார்.

இதேபோல் தமிழீழப்பெண்கள் நாளை முன்னிட்டு 1997ல் நடைபெற்ற போட்டியில், கட்டுரைப்போட்டியில் இரண்டாம் இடத்தையும் 1996ம் ஆண்டு நடந்த தியாகி திலீபன் நினைவுப்போட்டியில் கட்டுரைப் போட்டியில் இரண்டாம் இடத்தையும் தனதாக்கிக் கொண்டவர் லக்ஷனா.

இவ்வளவு பண்புகளையும் ஒருங்கேகொண்ட லக்ஸனா, வீட்டிலும் மிகுந்த பொறுப்புணர்ச்சியாக செயற்படுகிறவர் என்கிறார் லக்ஸனாவை வீட்டிலும் அறிந்து கொள்ளக்கூடிய சந்தர்ப்பமுள்ள ஆசிரியர் ஒருவர். வீட்டுப்பணி, சகோதரர்களுக்கிடையேயான புரிந்துணர்வான உறவுமுறை என்பவற்றில் தன்னைக்கவர்ந்த மாணவி இவர் தான் என்கிறார் இவ்வாசிரியர்.

வயதில் இளைய மாணவியாக இருப்பினும் பெரியோரிடையே காட்டுகின்ற பணிவு, ஒழுக்கம் என்பன பாடசாலை ஆசிரியர்கள் மத்தியில் இவரை இனங்காட்டியது என்கிறார் மற்றொரு ஆசிரியர். சென்ற நாற்று மேடைக்கு அறிமுகப்படுத்திய முள்ளிவாய்க்கால் பாடசாலையின் மாணவியினைப் பற்றிப் படித்த போது தனக்கு லக்ஸனாவின் ஞாபகமே வந்தது என்கிறார் இந்த ஆசிரியர்.

உங்கள் வாழ்வின் வழிகாட்டியாக திகழ்பவர் யார் என்று கேட்டபோது .....

தனது அப்பா, அதிபர், தனது உடற்பயிற்சி ஆசிரியர், அனைவரையும் ஒட்டுமொத்தமாக குறிப்பிடுகிறார்.

உங்கள் புத்தகங்களின் வாசிப்பு விருப்பத்தினைக் கூறுங்களேன் எனக்கேட்டபோது......

எனது பொழுது போக்கே புத்தகங்கள் வாசித்தல்தான். எமது பாடசாலையில் கிடைக்கின்ற புத்தகங்கள் சஞ்சிகைகளை விரும்பிப்படிப்பேன். மேலும் நிறைய வாசிக்க வேண்டும் என்று ஆர்வம் உண்டு. எம்மிடம் போதிய புத்தகங்கள் இல்லை. எமது பாடசாலையின் வசதியீனங்களில் இதுவும் ஒன்று. இன்று எமக்கு ஏற்பட்டுள்ள யுத்த சூழ் நிலையில் எமக்கான புத்தகங்கள் வருவதில்லை. ஒழுங்கான பாடப் புத்தகங்களே இல்லை என்று கவலையோடு கூறினார்.

சமூக விருத்தியின்மை, சூழல், யுத்தகால நெருக்கடிகள் என்பன, எத்தனை திறமைசாலிகளை இலைமறைகாய்களாக்கின்றன என்பதற்கு லக்ஸனா ஓர் உதாரணம் எங்கோ ஓர் மூலையில் அடுத்தவர் அறியாவகையில் தனது திறமைகளால் மட்டும் பிரகாசித்துக்கொண்டிருந்த ஒரு இளம் நாற்றை அடையாளம் கண்ட திருப்தியுடன் எமது நேர்காணலை நிறைவு செய்து கொண்டோம். □

# தேடலும் தெளிவும்

**பெண்களின் வாழ்வில் முக்கிய அங்கம் வகிக்கும் நெற்றித் திலகம் ( பொட்டு ) அழகுசாதனமா ? பண்பாட்டுச் சின்னமா ?**

மேற்படி விவாதம் கடந்த மூன்று இதழ்களில் இடம்பெற்று வருகிறது. பொட்டு பண்பாடா? அழகுசாதனமா? என்ற விவாதம் எதிலும் மனத்தைத்திருப்பாது பொட்டையும், பூவையும் தமது அதிவிருப்பத்திற்குரிய பொருட்களாக கருதும் பெண்கள் தான் எம்மிடம் ஏராளம். வீட்டிற்குள் அடைந்து இடப்பவள் என்றால் என்ன? படித்து வேலைபார்ப்பவர்கள் என்றால் என்ன? எல்லாவற்றிற்கும் மேலாக சென்று முற்போக்கு என்ற பெயரில் மேற்குலக பெண்ணிய சிந்தனைகளை பிரதிபலிப்பவளாக இருந்தாலும் என்ன? இந்த பொட்டின் கவர்ச்சியிலிருந்து யாருமே விடுபடுவதில்லை என்பதுதான் உண்மை. அந்தளவிற்கு அது எம்மில் ஊறிவிட்டது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சின்னம், பெண்களின் அதிவிருப்பத்திற்குரிய சின்னம். ஒரு சாரா ருக்கு மட்டும் மறுக்கப்படுவது ஏன் என்ற கேள்வி மனதை நோகடித்ததன் மூலம் எழுந்ததே இவ்விவாத அரங்கு.

முதலில் பண்பாடா, அழகுசாதனமா என்ற விவாதத்தை விட்டுவிட்டு பொட்டு தொடர்பாக நிலவிவரும் பலதரப்பட்ட கருத்துநிலைகளை பார்ப்போம். பொட்டு பெண் அடிமைத்தனத்தின் குறியீடு என்ற வாதத்தை முன்வைப்போர் கூறும் கருத்தை நோக்குவோம்.

மனிதன் சமூகமாக நிலைகொள்ளாது சிறுசிறு குழுக்களாக நாடோடி வாழ்க்கை வாழ்ந்த காலத்தில், பலமே அவர்களின் உயிர்வாழ்வை தீர்மானித்தது. அதாவது உணவு தேடி வேட்டைக்குப் போகும் சமயத்தில் விலங்குகளையோ அல்லது ஏனைய எதிர்க்குழுக்களையோ எதிர்த்துப் போராடுவதற்கு அவனுக்கு பலம் தேவையாக இருந்தது. இதற்கு தனது ஆட்பலத்தை பெருக்கிக்கொள்ள வேண்டிய தேவை அக்குழுவிற்கு இருந்தது. பெண் ஒரு இனம் பெருக்கும் கருவியாக தொழிற்பட்ட அந்த சமயத்தில் அவளே முக்கியமானவளாக, போற்றப்

படக்கூடியவளாக், அனைவரின் மதிப்பிற்கும் உரியவளாக விளங்கினாள். இரு வெவ்வேறு குழுக்கள் தமது உணவு தேடும் போட்டியில் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொள்ளும் சமயங்களில் பலம்வாய்ந்த குழுவானது தன்னால் தாக்கப்பட்ட குழுவில் முதல் அபகரித்துக்கொள்வது பெண்களையே. அதன் பின்னர்தான் கால் நடைகளும் இதர பொருட்களும். அபகரிக்கப்பட்ட பெண் தப்பி யோடி மீண்டும் தனது குழுவிடம் போய் சேராதிருக்கும் பொருட்டு நெருப்புக்கொள்ளியால் நெற்றியில் சூடுபோட்டு விடு வார்களாம். இவள் எங்களுக்குரியவள் என்பதை அடையாளப் படுத்த இடப்பட்ட சூடுதான் பின்னர் பற்பலவடிவங்களுக்கு மாறி பொட்டு என்ற நிலைக்கு மாறியது. இன்னும்கூட அது ஒரு குறியீடாகவே அதாவது திருமணமாகாத பெண்ணென் றால் கறுப்புப்பொட்டு, திருமணமானவள் சிவப்புப்பொட்டு, விதவை எனில் பொட்டே இல்லை என்றளவிற்கு இது பின் பற்றப்படுகிறது.

பொட்டுத்தொடர்பாக கூறும் இன்னோர் கருத்து அறி வியல் சார்ந்ததென்று அதாவது ஒரு மனிதனின் உணர்ச்சி நரம்புகள் எமது புருவத்தின் நடுவேதான் ஒன்று சேருகின்றன எனவும், இதனைத் தொடர்ந்து உற்றுப்பார்க்கும் ஒருவர் எம்மை தமது சிந்தனைகளுக்கு ஆட்பட வைப்பது சுலபம் என்றும், எனவேதான் புருவமத்தியில் பொட்டு வைத்தல் அவசியம் எனவும் கூறப்படுகின்றது. அவ்வாறாயின் விதவைகள் ஏனைய ஆண் களினால் கவரப்படக்கூடாது என்ற நோக்கில் பகட்டாக அலங் காரம் செய்வதை தடுக்கும் இச் சமூகம் அவளின் பொட்டை மறுத்து அடுத்தவனால் மனோவசியப்படுத்தி தனது ஆசைகளுக்கு பலியாகும்படி செய்வது ஏன் என்ற கேள்வி இங்கு எழுகின்றது. இந்த நரம்புகளை குளிர்ச்சி அடையப்பண்ணுவதன்மூலம் உடல் நலத்தைப்பேண முடியும் என்ற காரணத்திற்காகவே நெற்றியில் சந்தனப்பொட்டு இடும் பழக்கம் வந்தது என கூறப்படுகின்றது. பெண்கள் மட்டுமன்றி ஆண்களுமே சந்தனப்பொட்டு இடுவதை நாம் காண்கின்றோம்.

சரி, மனித வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் இந்தப் பொட்டின் பங்களிப்பை நோக்குவோம்.

ஒரு குழந்தை பிறந்ததும் ஆண், பெண் வேறுபாடின்றி அதற்கு நாம் வைப்பது கறுத்தப்பொட்டுத்தான். அதுவும் அழ காக வட்டமாக வைப்பதிலும் பார்க்க பெரிதாக, கோணல் மாணலாக நாம் வைப்பதற்கு காரணம் குழந்தைக்கு திருஷ்டி

அதாவது கண்ணூறுபட்டுவிடும் என்ற காரணத்திற்
காகத்தான். பண்பாடா அழகுசாதனமா என்ற சிந்தனையே
இங்கு எழுவதில்லை குழந்தைகள் வளர்ந்து சிறுவர்கள் ஆகும்வரை
இது தொடரும். பிள்ளைப்பராயத்திலே ஆண் குழந்தைகளுக்கு
பொட்டு வைக்கும் பழக்கம் மெல்ல மெல்ல மறைந்து பெண்
குழந்தைகளுக்கு இது தொடர்கின்றது. இங்கும்கூட அந்தப்பெண்
பிள்ளைகளுக்கு தாம் ஏன் பொட்டு வைக்கின்றோம் என்ற
சிந்தனை எழுவதில்லை. எல்லோரும் வைக்கின்றார்கள் நாமும்
வைப்போம் என்ற நிலைதான்.

பிள்ளைப்பருவம் கடந்து இளமைப்பருவத்தில் காலடி
எடுத்து வைக்கும்போது பொட்டுபற்றிய முன்னைய வரைவிலக்
கணங்கள் அனைத்தும் அடிபட்டுப்போக பெண்ணின் ஒவ்வொரு
சிந்தனையிலும் தான் அழகாக இருக்க வேண்டுமென்ற ஒரே
ஒரு எண்ணம்தான் மேலோங்கியிருக்கின்றது இங்கு பொட்டு
களின் நிறங்கள் ஏன் வடிவங்கள்கூட மாறுகின்றன. கூம்பு
வடிவம், இலை வடிவம், மினுங்கல் பொட்டு, முத்து வைத்த
பொட்டு என பலரகங்களை நாம் பார்க்கின்றோம். அதேபோல்
மணமாகாதவர் கறுத்தப்பொட்டுத்தான் அணிய வேண்டும்
என்ற விவாதம் அடிபட்டுப்போக சேலையின் நிறத்திற்கு பொருந்
தும் வகையில் கறுப்பு, சிவப்பு, பச்சை என்ற நிறங்களும் மாறு
கின்றன. இங்கு முழுக்கமுழுக்க அழகுசாதனமாகவே பொட்டு
பயன்படுகின்றது.

மணமான பின்னர் குங்குமந்தான் அணிய வேண்டும்
என்பது பண்பாடு. ஆனால் இங்கும்கூட பல நிலைபிறழ்வுகளை
நாம் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. வேலைக்குச் செல்லும்
பெண்கள் குங்குமத்திற்குப் பதிலாக ஒட்டுப்பொட்டையே அதிகம்
அணிகின்றார்கள். இதற்கு இவர்கள் கூறும் காரணம் வியர்வைக்
காரணமாக குங்குமம் கரைந்து வழிந்து முகத்தை அசிங்கம்
படுத்துகின்றது என்பதும், வேலைக்குச் செல்லும் அவசரத்திற்கு
ஒட்டுப்பொட்டு எமக்கு சிரமத்தைக் குறைக்கின்றது என்பதும்
தான். இதில் நாம் ஒன்றை அவதானிக்கலாம். கன்னிப் பருவத்
தில் நெற்றியில் பொட்டு இல்லாமல் திரியும் பெண்கள் பலர்.
ஆனால் திருமணமான பெண் வெளியே சென்றால் அவளைப்
பொட்டுடன் இன்றி பார்க்கவே முடியாது. பூவும் பொட்டும் மங்களச்
சின்னம், இதை நாம் அலட்சியப்படுத்துவது கணவனுக்கு
ஆபத்தை ஏற்படுத்தும் என்ற உணர்வே இங்கு அதிகமாக
உள்ளது. இங்கும்கூட திருமணமான புதிதில் நெற்றி, உச்சி,

கழுத்து. மூன்று இடத்திலும் நிரந்தர இடத்தைப்பெறும் பொட்டு ஓரிரு பிள்ளைகள் பிறந்ததும் படிப்படியாக குறைந்து வெளியே போகும்போது மட்டும் பேணப்படும் நிலைக்கு வந்துவிடும். குளித்து விட்டு எந்நேரமும் குங்குமத்துடன் பெண்களை சில வீடுகளில்மட்டும் காணலாம். கொஞ்சம் படித்த சமூகங்களில் குங்குமத்திற்கு தற்காலிக ஓய்வு கொடுத்துவிட்டு ஒட்டுப்பொட்டு நிரந்தர இடத்தை பெறுவதுடன் நெருங்கிய உறவினர்களின் வைபவங்கள் மட்டும் அரிதாக குங்குமத்திற்கு அதிஷ்டம் அடிக்கும்.

தனது மனைவியாக ஏற்கப்படும் பெண்ணுக்கு கணவனால் முதன் முதல் இடப்படுவதுதான் குங்குமம் என்ற ஒரு கருத்தும் நிலவுகின்றது. அவ்வாறாயின் கன்னிப் பெண்கள் சிலர் தமக்கு திருமணம் நிச்சயம் ஆனதும் அவனது கழுத்தில் தாலி ஏற முன்னரே குங்குமம் அணியத்தொடங்குவது ஏன்? பூப்புனித நீராட்டு விழாவில் வயதுக்கு வந்த அந்தப் பெண்பிள்ளைக்கு குங்குமம் அணிவது ஏன்? கோவில்களில், விழாக்களில், ஆண், பெண் பேறுபாடின்றி திருநீறு சந்தனத்துடன் குங்குமம் தரப்படுகின்றதே ஏன்? இங்கு தமிழர் பண்பாட்டின் மங்கள, புனித சின்னங்களாக இவை கருதப்படுவதனாலா? என்ற கேள்வி எழுகின்றது. மாதவிலக்கு வரும் காலங்களிலும் சாவீட்டு நிகழ்வுகளிலும் குங்குமம் இடுவதை ஏன் எந்தவொரு பொட்டும் இடுவதை பெண்கள் பெரும்பாலும் தவிர்த்துக் கொள்கின்றார்கள். பொட்டு பண்பாடுதான் என்க்கருதினால் சுமங்கலிப்பெண் ஏன் இக்காலங்களில் தவிர்க்க வேண்டும என்ற கேள்வி எழுகின்றது. இதற்கு குங்குமம் புனித சின்னம் என்று பதில் கூறுவோமானால் ஏனைய புனித சின்னங்களான திருநீறும் சந்தனமும் விதவைப் பெண்களுக்கு அனுமதிக்கப்படும் போது குங்குமம் மட்டும் ஏன் மறுக்கபபடுகின்றது? விதவைகள் கோயிலே கதியென்று கிடக்க அனுமதிக்கும் எம் பணபாடு அங்கு கொடுககப்படும புனிதப் பொருடகளில் குங்குமததை மடடும் ஏன் மறுக்கின்றது? இதிலிருந்து தெரிவது என்ன? குங்குமம் மங்கலப் பொருள். பணபாட்டின் சின்னம் என்பதற்கும் மேலாக அது ஒரு அழகு சாதனம். கணவனை இழந்த பெண பூவுடனும் பொட்டுடனும் திரிந்தால் அடுத்த ஆண்களின் கவனத்தை ஈர்ப்பாள். அது எம்பண்பாட்டை சிரழிக்கும் என்ற எண்ணம் மேலோங்குகின்றது. இங்கு பொட்டு வெறுமனே பண்பாடு என்றால் திருமணம் முடிந்த அன்றுதான் பொட்டு வைக்கத் தொடங்க வேண்டும் என வைத்திருக்கலாம் அல்லவா ?

எனவே திருமணங்கள்,விழாக்கள், பண்டிகைகளில் பொட்டு கட்டாயம் அணியப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுவது பண்பாடுதான் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் அன்றாட வாழ்வில் பெண்களின் உள்ளத்தில் பெண்களை நோக்கும் ஆண் களின் பார்வையில் பொட்டு பெண்ணுக்கு அழகூட்டும் சாதன மாகவே இருக்கின்றது என்பதை யாரும் மறுக்க முடியாது.

(சில குடும்பங்களில் பிள்ளைகள் வயதுக்கு வந்த பின்பும் திருமணம் செய்ய முடியாத நிலையில் இருக்கும் குடும்பங்களில் உள்ள தாய்க்கு கணவன் இருந்த போதும் அப்பெண் பொட்டு வைப்பதில் நாட்டம் கொள்வதில்லை. யாரும் வற்புறுத்தினால் ''கட்டையிலே போற வயதிலை என்னத்திற்கு பொட்டும் பிறையும்'' எனச்சலித்துக்கொள்வதை நாம் பார்க்கின்றோம். கணவன் உயிருடன் இருக்கும் போது இந்தச் சிந்தனை ஏன் ஏற் பட்டது? ஏதாவது மூகூர்த்தங்களில் மங்கள காரியத்திற்கு தம்பதிகளாக நிற்கும் நேரத்திலேயே அவர்களை குங்குமத்து டன் காணமுடியும். 60 வயதுக் கிழவியென்றாலும் புருசன் உயி ருடன் இருந்தால் பொட்டு வைத்துத்தானே ஆக வேண்டும் என்ற எண்ணப்பாங்கு இத்தகைய பருவத்தில் மறைந்து வருவ தையே பெரும்பாலும் காண்கின்றோம்.)

தான் பிறந்தது தொடக்கம் பூவையும் பொட்டையும் தனது மிக விருப்புக்குரிய அணிகலன்களாக பயன்படுத்தி மகிழ் வடையும் ஒரு பெண்ணுக்கு அது மறுக்கப்படுவது ஒரு கொடு மைதான். பண்பாடு காப்பவர்களே! கணவன் தந்ததுதான் குங்குமம் என்றால் அவன் இறந்ததும் குங்குமத்தை மட்டும் வேண்டுமென்றால் பறித்து விடுங்கள். எங்கள் உரிமையான பூவையும்பொட்டையும் ஏன் பறிக்கின்றீர்கள்? என்று பெண்மனம் ஓலமிடுவது உங்களுக்கு கேட்கவில்லையா? □

விவாத மேடையின்

## இந்த இதழ் தலைப்பு:-

## "சமூக அந்தஸ்தை தீர்மானிப்பது அறிவு, பணம்"

# எண்ணங்கள்

மால்கம் மாட்ஸ் என்பவர் அமெரிக்காவின் புகழ் பெற்ற பிளாஸ்டிக் அறுவைச்சிகிச்சை நிபுணர்களில் ஒருவர். தன்னம்பிக்கை ஊட்டும் பல புத்தகங்களை எழுதியவர். இவரிடம் ஒரு நாள் சிகிச்சைக்கு வந்த பெண்மணி "டாக்டர் எனது மூக்கு சரியாக இல்லை" என்று கூறினாள். ஆனால் டாக்டரின் பார்வையில் அவளுடைய மூக்கு ஒன்றும் அப்படி பேசமாகத் தெரியவில்லை. ஆனால் மூக்கை சரிப்படுத்திவிட்டால் அந்தப் பெண்மணிக்கு தன்னைப்பற்றிய மதிப்பும், பெருமையும் உயரும் என எண்ணிய டாக்டர் அறுவைச்சிகிச்சை செய்தார் மூக்கு மிக பிரமாதமாக, அழகாக அமைந்து விட்டது புதிய மூக்குடன் வீட்டுக்கு சென்ற பெண் நான்கு நாட்களில் மீண்டும் டாக்டரிடம் வந்து 'மூக்கு இன்னமும் எனக்கு பிடித்தமாதிரி இல்லை' என்றாள்.

மூக்கு அற்புதமாக இருந்தும்கூட இப்படி குறைபடும் பெண்ணை என்ன செய்வது என யோசித்த மால்கம் மாட்ஸ், அம்மா மூக்கு எல்லாம் சரியாகத்தான் இருக்கின்றது. உங்கள் மனதில் உங்களைப்பற்றிக் கொண்டுள்ள எண்ணம்தான் சரியாக இல்லை. உங்களுக்கு அருவருக்கத்தக்க மூக்கு இருக்கின்றது என்ற எண்ணம் உங்கள் மனதில் ஆழப்பதிந்துபோய் இருக்கின்றது.


# முடமானால்...

இந்த எண்ணம் மாறும்வரை நான் எத்தனை அறுவைச்சிகிச்சை செய்தாலும் 'உங்களுக்கு திருப்தி ஏற்படப்போவதில்லை, குறை உங்கள் மூக்கில் இல்லை, உங்கள் எண்ணத்தில்தான். எனவே அதைத்தான் சரிப்படுத்த வேண்டுமேயன்றி மூக்கை அல்ல என்றார்.

மக்கள் தங்களைப்பற்றி கொண்டுள்ள எண்ணத்தால் தான் பாதிக்கப்படுகின்றார்கள் என்ற பேருண்மையை கண்டு பிடிக்க உதவியாக இருந்த இச் சம்பவம்தான் " சுய எண்ணம் " (self image) என்ற புகழ் பெற்ற நூலை எழுத மால்கம் மாட்சைத் தூண்டியது. □

(எஸ். உதயமூர்த்தியின் நூலிருந்து)

# பாக்கியம் மாமியும் பரமேசுவரியும்



**பாக். மாமி:-** என்ன பரமேசு — முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு ஒருமாதிரி நிற்கிறாய்? ஏன் —ஏதும் பிரச்சனையே? —

**பரமேசு:-** என்ன மாமி... தெரியாத மாதிரிக் கேக்கிறாய் .. எங்கட மூத்தவன் இருக்கிற ஊர்ப்பக்கம் கிபிரும் அடிச்சு செல்லும்

அடிச்சு கனசனம் செத்துப்போச்சு தெல்லே...

பரக்.மாமி:- ஓமோம் ... எங்கட தலைக்கு மேலாலை தானே எல்லாச் செல்லுகளும் இரைஞ்சு கொண்டு போனது ... மூத்தவன் ஆக்கள் எங்கை? ...

பரமேசு:- நிண்ட நிண்டபடி ஓடி வந்து இஞ்சை எங்கட வீட்டில்தான் இருக்கிறான் ... அவன்ர சின்னப் பெடியனுக்குமெல்லே காலில காயம் ...

பரக்.மாமி- நாசமாப் போவார் ... சண்டையில் தங்களுக்குத் தோல்வி எண்டவுடனை தாங்க முடியாம சனங்களையெல்லே குண்டுகளைப் போட்டு கொலை செய்யுறான்கள்

பரமேசு: - உதுமட்டுமேயணை மாமி அவை செய்யிற அநியாயம் ... வடமராட்சியில் வாய்பேசாத பொம்பிளை ஒருத்தியை கெடுத்திருக்கினமாமெல்லே ......

பரக். மாமி - ஓ .... சனத்தைப் பாதுகாக்க வந்திருக்கிறம் ... சனத்துக்கு உதவிசெய்ய வந்திருக்கிறம் எண்டு சொன்னவை ... இண்டைக்கு நல்ல உதவியளைத்தான் செய்யினம்போல ... ...

பரமேசு:- ஓமணை ... ஓ ... நாங்கள் செய்யிற உதவிகள் வெளி உலகத்துக்குத் தெரிய வரக் கூடாதெண்டு ..... செய்தியளையுமெல்லே வெளியாலை வரக்கூடாதெண்டு ... எல்லாரையும் வெருட்டியிருக்கினமாம்... ...

பரக். மாமி:- என்னத்தைப் போட்டு மூடினாலும் உண்மைகளை ஒருகாலமும் மறைக்கேலாது பரமேசு ...... உண்மையள் ஊருலகத்துக்கு தெரியவேண்டித்தான் வரும் ...

# வன்முறையின் பலிக்கடாக்கள்

**[சென்ற இதழ் தொடர்ச்சி]**

## பாரம்பரிய சடங்குகள்:-

பாரம்பரிய சடங்குகளின் அடிப்படையில் பெண்களை வன்முறைக்குட்படுத்தல் நடத்தைகள் வன்முறையின் இன்னோர் வடிவமாகக் கருதப்படுகின்றது. மனித உரிமைகள் தொடர்பான நிகழ்ச்சி நிரலில் பொது மக்களின் கவனத்தை மிக அதிகம் ஈர்க்கும் விடயமாகக் கருதப்படுவதும் இது தான். கணவன் இறந்தபின்பு மனைவியை உடன் கட்டை ஏறவைக்கும் நிகழ்விற்குப் பெயர் பெற்ற நாடு இந்தியா. "சதி" என்ற பெயரில் உலக இலக்கியங்கள் அனைத்திலும் இந்த வன்முறை தொடர்பான விமர்சனங்கள் இடம் பெற்று இருக்கின்றன. இந்த எரியூட்டும் வைபவம் இன்று இல்லாது ஒழிக்கப்பட்டாலும் கூட விதவைப் பெண்ணுக்கு மொட்டை அடித்து வெள்ளைச் சீலை உடுத்தும் வழக்கம் முற்றாக மறைந்து விடவில்லை. இதிலும் கொடுமை பால்ய விவாகத்தின் மூலம் விதவையாகும் சிறுமிகளைக் கொடுமைப்படுத்தும் அவலமாகும். இது இன்னமும் முற்றாக நாட்டை விட்டு அகலவில்லை. சினிமா உட்பட இந்திய இலக்கியங்கள் அனைத்திலும் முதன்மை பெற்று விளங்கிய இக்கருப்பொருள்கள் இன்று மெல்ல மெல்ல அருகி வருகின்றதற்கு பெண்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள விழிப்புணர்வே காரணமாகும். எனினும் சிறுவயதிலிருந்தே தனது உடமையாகக் கருதி சூடிமகிழ்ந்த பூவையும், பொட்டையும் கணவனை இழந்தபின் இழக்க நிர்ப்பந்திக்கப்படும் தமிழ்ப்பெண்ணும், திருமணச் சந்தையில் விலை பேசும் பொருட்டு சிறுவயதிலேயே கால்களுக்கு இரும்புச் சப்பாத்து அணிவிக்கப்படும் சீனப்பெண்ணும் வன்முறையின் பலிக்கடாக்கள் தான்.

**- குந்தவை -**

இவை அனைத்திற்கும் சிகரம் வைத்தாற் போல் 'பெண்களின் பிறப்புறுப்புக்களைச் சிதைக்கும் ஒரு சடங்கு ஆபிரிக்க நாடுகளில் உள்ள முஸ்லிம்களிடம் மேலோங்கியிருக்கின்றது. பாரம்பரியத்தைப் பேணுதல், சமூக ஏற்றுக்கோடல், மதம், திருமணம் செய்வதற்கான வாய்ப்பை

அதிகப்படுத்துதல், கன்னித்தன்மையைப் பேணுதல், சுகாதாரம், வரைமுறையற்ற ஆண் பெண் உறவைத்தடுத்தல், திருமண வாய்ப்பை அதிகரித்தல், கணவனைத்திருப்திப் படுத்தல் போன்றவை இந்தப் பிறப்புறுப்பு சிதைப்பதற்கான காரணங்களாக கொள்ளப்படுகின்றன. 1985 ல் சியராலியோன் என்ற நாட்டில் 400 பெண்களை பரிசோதனைக்குட்படுத்தியபோது அதில் 369 பேர் இந்த "சுன்னத்" சடங்கு செய்யப்பட்டிருப்பது தெரியவந்தது. இதில் பெரும்பாலானோர் (257) பாரம்பரியம் என்ற பெயரில் இதை நாம் செய்திருப்பதாக கூறியிருந்தனராம். 105 பேர் சமூக ஏற்றுக்கோடலுக்காகவும், 51 பேர் மதச் சடங்கு என்பதற்காகவும் சுன்னத்தை செய்திருக்கின்றனர் என இந்த ஆய்வு தெரிவிக்கின்றது. இந்தக் கொடும் செயலை நிறுத்துவதற்கு ஐ. நா. பொருளாதார சமூக சேவையானது 1958 ல் உலக சுகாதார நிறுவனத்தை வேண்டியது. எனினும் சுன்னத் சடங்கானது சமூக, கலாச்சார பின்னணியைக் கொண்டிருப்பதனால் சுகாதார நிறுவனத்தின் வரையறைக்கு வெளியே உள்ளது என்ற அடிப்படையில் இந்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது. எனினும் 20 வருடங்களின் பின்பு 1979 ல் "பெண்களதும் சிறுவர்களதும் ஆரோக்கியத்தைப் பாதிக்கும் பாரம்பரிய சடங்குகள்" என்ற தலைப்பில் உலக சுகாதார நிறுவனத்தால் நடத்தப்பட்ட இக் கருத்தரங்கில் 20 அரசசார்பற்ற நிறுவனங்கள் இச்செயற்பாடு தொடர்பான தமது கண்டனத்தை வெளிப்படுத்தின. 1984 இல் டாக்கா நகரில் நடைபெற்ற கருத்தரங்கில் பாரம்பரிய சடங்குகள் தொடர்பான ஆபிரிக்க குழு ஒன்று உருவாக்கப்பட்டு இச்செயற்பாட்டை நிறுத்தும் முயற்சிகளும் அது தொடர்பான ஆய்

## ஆண்களுக்கு மட்டுமா?

முஸ்லிம் ஆண்களுக்கு "சுன்னத்" என்ற சடங்கு செய்யப்படுவது நீங்கள் அறிந்த விடயம். ஆனால் முஸ்லிம் பெண்களுக்கும் "சுன்னத்" செய்யும் வழக்கம் உண்டு என்பது வெகு சிலருக்கு மட்டுமே தெரிந்த ஒன்று. எகிப்து, சூடான் போன்ற வடஆபிரிக்க நாடுகளில் இது ஒரு புனித செயலாக கருதப்படுகின்றது. இலங்கைவாழ் முஸ்லிம்களிலும் சில பகுதியினர் இச்சடங்கை மேற்கொள்ளுகின்றனர் என்பது ஆச்சரியம் வாய்ந்த ஒரு தகவல்தான்.

# சடங்கு என்ற பெயரில் இப்படியும் ஓர் அவலம்!

உடலில் எவ்வித ஆடையுமின்றி நிர்வாண நிலையிலுள்ள ஒரு சிறுமியை சிறிய இருக்கை ஒன்றில் இருத்தி, அவளின் கைகளை ஒரு பெண்ணும், சிறுமியின் கருவாய் அகலமாக திறக்கும் பொருட்டு தொடைகளை இரு பெண்களும் வலுவாகப் பிடித்திருக்கும் நிலையில் இந்த சுன்னத் சடங்கு ஆரம்பிக்கப் படும் சிறுமியின் கைகள் பின்புறமாக கட்டப்பட்டோ அல்லது ஏனைய பெண் விருந்தினர்கள் இருவரால் இறுக்கமாகப் பிடிக்கப்பட்டோ இருக்கும் மிகவும் வயதான பெண் ஒருவர் சிறுமியின் பிற புறுப்பில் உள்ள கிளிற்றோரிஸ் என்னும் பகுதியைப் பரிசோதித்து மெல்லிய சத்திரக்கத்தியினால் கருவாயின் பெண்குறியின் மேலிருந்து அடிவரை வெட்டுவார். பின்னர் கருவாயின் பேரிதழின் உட்புறம் இருக்கும் சதைப் பகுதியை செதுக்கி அகற்றி விடுவார். காயத்திலிருந்து வடியும் இரத்தம் துடைக்கப்பட்ட பின்னர் சிறுமியின் தாயாரும் விருந்தினர்களும் செய்த வேலையை பரிசோதிப்பர் பெரிய கருவாயின் உட்புறம் சிதைக்கப்படும் அளவானது சுன்னத் செய்த பெண்ணின் தொழில்நுட்பத் திறனிலும் அவரின் அனுபவத்திலும் தங்கியிருக்கிறது.

சிறுநீர் விடுவதற்கும், மாதவிடாய் கழிவிற்குமென சிறிய அளவு துவாரம் விடப்பட்டபின்னர், வெட்டிய பகுதியானது பசையொன்றின் மூலம் இறுக்கமாகப் பூசப்பட்டு அதில் நான்கு அல்லது ஐந்து வேலம் முட்கள் செருகப்பட்டு இவை நூலினால் அல்லது குதிரை மயிரினால் நன்கு கட்டப்படும். கருவாயின் பேரிதழ் நன்கு கட்டப்பட்டு விட்டதா என்பதை முள்ளினால் குத்திப்பார்த்து உறுதி செய்த பின்னர் மீண்டும் பசை பூசியதும் சுன்னத் சடங்கு முடிவடையும். இதன் பின்னர் சிறுமி அலங்காரம் செய்யப்பட்டு படுக்கையில் கிடத்தப்படுவாள். கிட்டத்தட்ட 15-20 நிமிடங்கள் நடைபெறும் இந்த சத்திரசிகிச்சையின் கால அளவு சிறுமியின் எதிர்ப்பாற்றல் சுன்னத் செய்யும் பெண்ணின் ஆற்றல் என்பவற்றிற்கேற்ப நீடிக்கவோ குறையவோ வாய்ப்புண்டு. இங்கு சுய உணர்வுள்ள நிலையில் அறுவைசிகிச்சைக்குட்படும் சிறுமி போடும் கூச்சல் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை.

வுகளும் மேற்கொள்ளப்பட்டன. பல மனித உரிமைப் பிரச்சனைகளில் அரசுகள் தமது கவனத்தை செலுத்துவதால் இச் செயற்பாடுகளில் அரசுகள் கவனம் செலுத்துவதில்லை என 1991 ல் இது தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்ட ஐ. நா. விசேட செய்தியாளர் திருமதி கலீமா எம்மார்க் வசாகி கூறுகின்றார்.

பெண்களுக்கான சுன்னத்தில் பலவகை உண்டு. பெண் பிறப்பு றுப்பின் உட்புற, வெளிப்புற கருவாயை பிளேட் அல்லது சவரக்கத்தியினால் வெட்டி பின் அதை பட்டுத்துணி கொண்டோ அல்லது வேலமுள், குதிரைமயிர் கொண்டோ தைத்துவிடுதல். கிளிரோறிஸ் எனப்படும் பகுதியைச் சூழ தோலை நீக்கிவிடுதல், பெண்பிறப்புறுப்பின் மேல் பகுதியில் உள்ள கிளிரோறிஸ் முற்றாகவே அகற்றிவிடுதல் என்பன இவற்றில் முக்கியமானவை. அரேபியா, பாகிஸ்தான் மக்களிடம் பெரும்பாலும் இந்த சுன்னத் வழக்கம் இல்லை. சவுதி அரேபியா, சிரியா, பாரசீக வளைகுடா நாடுகளில் இது அருவருக்கத்தக்க செயலாகக் கருதப்படும் அதே சமயம், எகிப்து, சூடான் போன்ற வட ஆபிரிக்க நாடுகளில் இது ஒரு புனித செயலாகக் கருதப்படுகின்றது. இலங்கை வாழ் முஸ்லிம்களிலும் சில பகுதிகளில் இந்த சுன்னத் வழக்கம் உண்டு. எனினும் இங்கு ஒரு வயசுக்குட்பட்ட குழந்தைக்கே இது செய்யப்படுகிறது. பெரும்பாலான பெண்களுக்கு தாம் சுன்னத் செய்யப்பட்டிருக்கின்றோம் என்பதே தெரியாது. மிக இரகசியமாக மேற்கொள்ளப்படும் இச்சடங்குகளுக்கென பெண்கள் கூட்டமும் உண்டு. அதற்கு கூலியும் உண்டு. மதரீதியான கடப்பாடு. எல்லோரும் செய்யும் போது நாமும்

★ ஆபிரிக்க நாடுகளில் குழந்தைகள் ஓரளவிற்காவது வளர்ந்தபின்னர் தான் அதாவது 7-10 வயதிற்கிடையில் இந்தச் சடங்கு மேற்கொள்ளப்படுகிறது.

★ இலங்கையில் ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கே இச்சடங்கு மேற்கொள்ளப்படுகிறது.

★ ஆயாக்கள், சவரத்தொழிலாளர்கள் என்போரால் சுன்னத் சடங்கு மேற்கொள்ளப்படுகின்றது.

★ எகிப்தில் அண்மையில் 15 - 49 வயதிற்குட்பட்ட 14, 779 பெண்களிடம் கணக்கெடுப்பு நடத்தியபோது 97% மானோர் சுன்னத் செய்துள்ளனர்.

செய்தால் என்ன என்ற கருத்து நிலை செக்ஸ் உணர்வை அனுபவிப்பதிலிருந்து பெண்களைக் கட்டுப்படுத்தல், தூய்மையைப் பேணுதல். முஸ்லிம் என்ற அடையாளத்தைப் பேணுதல் போன்ற காரணங்களுக்காக இச்சடங்கு மேற்கொள்ளப்படுகின்றதாம்.

எகிப்து தேசத்தில் கடந்த 14 நூற்றாண்டுகளாக கடைப்பிடிக்கப்பட்டு வரும் சுன்னத் சடங்கிற்கு எதிராக சட்டம் இயற்றுவதற்கு குடியரசுத்தலைவர் ஹோஸ்னி முபாரக் அஞ்சுவதாகத் தெரிகிறது. எனவே, இப்பிரச்சனையை நேரடியாக அணுகாமல் சுகாதாரத் துறையின் ஊடாக ஒரு தடையுத்தரவை சென்ற ஆண்டு அமுல்படுத்தியிருந்தார். ஆனால் இந்த தடையுத்தரவிற்கெதிராக போர்க் கொடி உயர்த்தியவர் பழமைவாதிகளின் தலைவரான ஷேக்யூசுப்பத்திரி என்பவர். இவர்களின் கடும் எதிர்ப்பு காரணமாக "சுன்னத் சட்டத்திற்குப்புறம்பானது என நாடாளுமன்றம் கருதவில்லை. எனவே சுகாதாரத்துறையின் ஆணை செல்லாது" என எகிப்து நீதிமன்றத்தின் நீதிபதி அப்துல் அஜிஸ்சமாதே தீர்ப்பளித்திருக்கிறார். இத்தீர்ப்பை எதிர்த்து மேல்நீதிமன்றிற்கு முறையீடு செய்திருக்கும் மனித உரிமை இயக்க ஆதரவாளர்களின் முயற்சிக்குப் பலன் கிடைத்திருக்கின்றது. ஆம்! சுன்னத் சட்டத்திற்கு புறம்பானதுதான் என இந் நீதிமன்றம் சென்ற மாதம் தீர்ப்பு வழங்கியிருக்கின்றது.

## பாலியல் வல்லுறவு: (RAPE)

இன்றைய செய்தித் தொடர்பு ஊடகங்களில் குறிப்பாக செய்தித்தாள்களில் செல்வாக்குச் செலுத்தும் செய்தி பெண்கள் மீதான பாலியல் வல்லுறவு தான். குடும்பங்களில் அல்லது சமூகங்களில் மேற்கொள்ளப்படும் நடத்தை சார் வன்முறை என்றாலும் சரி, போர்க்காலங்களில் மேற்கொள்ளப்படும் இராணுவ ஆக்கிரமிப்பிலும் சரி முதலில் பலியாவது பெண்களும் சிறுபிள்ளைகளும்தான். உலகம் முழுவதிலும் அன்றாட நிகழ்வாக மாறிவிட்ட இத்தகைய வன்முறையானது பொதுவாக குற்றவியல் நீதித்துறைக்கு வருவதில்லை. காரணம் பாலியல் வல்லுறவிற்குட்படும் பெண்ணுக்கு சமூக அங்கீகாரமோ வாழ்க்கையோ இல்லை என்ற யதார்த்தமே. அமெரிக்காவில் ஒவ்வொரு மணித்தியாலமும் 16 பெண்கள் பாலியல் வல்லுறவிற்குட்படுகின்றனர் என 1890ம் ஆண்டு நியூஸ்வீக் சஞ்சிகை கூறுகின்றது. இங்கு பாலியல் வன்முறை விகிதாசாரம் பிரித்தானியாவைவிட 13 மடங்கும், ஜேர்மனியைவிட 4 மடங்கும், ஜப்பானைவிட 20 மடங்கும் கூடியது என இப்புள்ளிவிபரம் கூறுகின்றது.

பொதுவாக பாலியல் வல்லுறவானது சட்டத்திற்கு முன்பு வருவதில்லை. தனக்கு இழைக்கப்பட்ட 'அநீதியை சமூகத்தின் பார்வைக்குக் கொண்டுவரத் துணியும் பெண்ணிற்கு ஆதரவை விடவும் சமூகப்புறக்கணிப்பானது கூடுதல் தாக்கத்தை எற்படுத்துகின்றது. சட்டங்கள்கூட பாலியல்வல்லுறவை குற்றமாக அங்கீகரிப்பதில் பாராதீனமாக உள்ளன என்பதைப் பின்வரும் எடுத்துக்காட்டு வெளிக்கொணர்கிறது.

பாடசாலைச் 'சிறுமி ஒருவரை பாலியல்வல்லுறவுக்கு உட்படுத்திய முறைப்பாடு' ஒன்று இந்தியாவின் ஒரிஸா மாநிலத்தில் இடம்பெற்றது. இந்த வழக்குத் தொடர்பான உரையாடலின் போது பொலிஸ் அதிகாரி ஒருவரின் அபிப்பிராயத்தைக் கேளுங்கள் [''பாலியல் வல்லுறவிற்கும் சட்டம் ஒழுங்கு என்பவற்றிற்கும் இடையில் எவ்வித சம்பந்தமும் இல்லை. நாம் குற்றங் என எடுத்துக் கொள்வது களவு. கொலை, இனக்கலவரம் என்பவற்றைதான். இந்த அளவு கோலை நாம் பின்பற்றினால் பாலியல் வல்லுறவு என்பது ஒரு குற்றமே இல்லை. பாலியல் 'வல்லுறவில் இலாபநோக்கம் எதுவும் வெளிப்படுத்தப்படுவதில்லை. எனவே இதை குற்றத்துடன் தொடர்புபடுத்த முடியாது.'']

### இதைவிட வேறுவழி?

பாலியல்வல்லுறவு முறைப்பாடு காவல்துறைக்கு வருமுன்பு வல்லுறவிற்கு உட்படும் ஒரு பெண் அதை முதலில் தனது தாய்க்குத் தெரிவிக்க வேண்டும். தாய் அதை அவரது கணவருக்குச் சொல்ல, கணவர் கிராமத் தலைவருக்குத் தெரிவிக்க, கிராமத்தலைவரோ வில்கோ எனப்படும் கிராமக் குழுவிற்கு அறிவிக்க, கிராமக்குழு பாதுகாவலர்குழுவிற்கு அறிவிக்க, பாதுகாவலர்குழு கவுன்சிலருக்கு அறிவிக்க, கவுன்சிலர் இதை காவல்துறைக்கு அறிவிப்பாராம். இவ்வாறு தகவல் போய்ச் சேரும் காலப்பகுதிக்குள் பிள்ளையின் உடலில் பாலியல் வல்லுறவுக்கான அத்தாட்சிகள் மறைந்துவிடும். எனவே, காவல்துறை நடவடிக்கை மேற்கொள்ள உதவும் தடயங்கள் பிள்ளையின் உடலில் இருந்து மறைந்துவிடும். இதுமட்டுமின்றித் தனக்கு என்ன நடந்தது என்பதை அப்பிள்ளை சரியாக உணரும் முன்பே ஊர் முழுவதும் இது தெரிய வந்துவிடும்.

★ இது நடப்பது சிம்பாவே எனும் நாட்டில் ★

பல பின்தங்கிய நாடுகளின் சட்டங்கள் பாலியல் வல்லுறவிற்குட்படும் பெண்ணை நேரடி முறைப்பாடு செய்ய அனுமதிப்பதில்லை. பல செய்முறைகளைக் கடந்து இம்முறைப்பாடு உரிய இடத்திற்கு வரும்போது காவல்துறைக்குத் தேவையான தடயங்கள் வல்லுறவிற்குட்படும் பெண்ணிடமிருந்து மறைந்து போய்விடுகின்றன. போர்க்காலங்களில் பெண்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் இவ்வன்முறையானது இலட்சக்கணக்கான பெண்களைப் பாதிக்கின்றது. இத்தகைய வன்முறைகள் பெரும்பாலும் அரசாங்கங்களினால் பாராதீனப்படுத்தப்படுவதே நடைமுறையாகும்.

## அநீதிக்குத் தண்டனை:-

பாலியல் வல்லுறவு நிகழ்ச்சிகளுக்கெதிரான சட்ட நடவடிக்கைகளை மகளிர் எழுச்சி அமைப்புகளின் ஓயாத போராட்டங்கள் வலுவூட்டி வருகின்றன. அண்மையில் தமிழ்நாடு சிதம்பரத்தைச் சேர்ந்த அண்ணாமலை வாசியான நந்தகோபால் என்பவரைத் திருட்டுச்சம்பவம் காரணமாகக் காவல்துறையினர் சந்தேகத்தின் பேரில் கைது செய்து சிறையில் அடைக்க, அங்கு அவர் அவமானம் தாங்காது தற்கொலை செய்துகொள்ள, இதை அறியாத அவர் மனைவி அன்றிரவு அவருக்கு உணவு கொண்டு சென்றபோது அங்கு கடமையில் ஈடுபட்ட காவல்துறை ஊழியர்களினால் பாலியல் வல்லுறவிற்குட்படுத்தப்பட, இது பெண்கள் அமைப்பின் உதவியுடன் சட்டத்தின்முன் கொண்டுவரப்பட்டபோது சப் இன்ஸ்பெக்டர் உட்பட 9 பேருக்கு குற்றவாளியாகக் கருதப்பட்டு 10 ஆண்டுகால சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளமை பெண்கள் எழுச்சி அமைப்புக்களின் வெற்றிக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைகின்றது.

## விபச்சாரம்: Prostitution

பெண்களை விபச்சாரத்தில் ஈடுபடுத்தும் செய்முறையும் பெண்கள் தாமே விபச்சாரத்தில் ஈடுபடும் வழக்கமும் தொன்றுதொட்டு நிலவி வருவது இலக்கியங்கள் வாயிலாக அறியக் கிடக்கின்றது. ஆரம்பத்தில் சிறு சிறு குழுவாக இயங்கி வந்த இந்தச் செயற்பாடு இப்போது கிடுகிடுவென துரித கதியில் வளர்ந்து திறுவனரீதியான செயற்பாடாக மாறியிருக்கின்றது. விபச்சாரம் என்பது ஒருவர் தன் விருப்பப்படி தெரிவு செய்யும் ஒரு தொழில்தான் என்று சிலர் வாதாடுகின்றனர். இந்த உலகத்திற்கேற்ற வகையில் உலகில் பல நாடுகள் சட்டரீதியான விபச்சார விடுதியைக் கொண்டிருக்கின்றன. பம்பாய் சிவப்பு விளக்குப் பகுதியிலிருந்து உலகின் பேர்போன நகரங்கள் வரை விபச்சாரம் ஒரு தொழிலாகவே மேற்கொள்ளப்படுகிறது. எனினும் இது ஒரு மனித உரிமை மீறல்தான் என்பதை நியாயப்படுத்தும் பல சம்பவங்களை நாம் அறிகின்றோம்.

விபச்சார விடுதிகளில் உள்ள எத்தனை பெண்கள் தாமாக விரும்பி இத்தொழிலை மேற்கொள்கின்றனர்? தொழில் வாய்ப்புப் பெற்றுத் தருவதாக மோசடி செய்தல், பலவந்தமாகக் கடத்துதல்; சினிமா மோகமுள்ள பெண்களை ஆசை காட்டி விபச்சாரவிடுதிகளில் விற்றுவிடுதல் போன்ற சம்பவங்கள்தான் விபச்சார விடுதிகளில் அங்கத்தவர் தொகை அதிகரிக்கக் காரணமேயன்றி தன்னிச்சையான விருப்பம் அல்ல.

அறிவியல் தொழில்நுட்பத் துறைகளில் மட்டும்தானா துரித வளர்ச்சி? விபச்சாரத்துறையிலும் புதுப்புது மாற்றங்கள், துரித அபிவிருத்திகள் என்று உலகமே பாதாளத்தை நோக்கி மிக விரைவாகத் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆண்களைப் பாலியல் ரீதியில் திருப்திப்படுத்தும் கலையில்தான் எத்தனை யுக்திகள், போதைமருந்துகளை உட்கொள்ளச் செய்தோ, அல்லது ஊசிமூலம் ஏற்றியோ, மனித இச்சையை அளவுக்கதிகமாகத் தூண்டி, வக்கிர உணர்வுகளுக்குத் தீனி போடும் வியாபார தந்திரம் இன்றைய விபச்சார விடுதிகளை நிறைத்திருக்கின்றது. குழுரீதியான பாலியல் உறவுகள் (Group sex), அதாவது ஒரு பெண்ணைப் பல ஆண்களுடனோ அல்லது பல பெண்கள் ஒரு ஆணுடனோ ஒரேசமயத்தில் பாலியல் உறவுகொள்ளும் நிகழ்வுக


நீங்கள் விரும்பும் வடிவங்களில்
குறித்த தவணையில் தரமான
நகைகளை ஓடர்மூலம்
பெற்றுக் கொள்ளவோ, உடனுக்குடன்
பெற்றுக்கொள்ளவோ நாடவேண்டிய இடம்

"ஈசன் நகைப்பூங்கா"

நாச்சிக்குடா சந்தி, முழங்காவில்.
உரிமையாளர்: ச. கோபிதாஸ்

ளும், இந்நிகழ்வுகளைத் திரைப் படமாக்கி அதை வைத்தே வாடிக்கையாளரைப் பிடிக்கும் தந்திரங்களும் இன்றைய உலகின் துரிதவளர்ச்சியில் முக்கியம் பெற்றிருக்கும் ஒன்று. இதன் இன்னோர் உச்சக்கட்ட அதிர்ச்சி சிறுவர் சிறுமிகளை இந்த விபச்சாரத்தில் ஈடு டுத்துதல்தான். ஆரம்பத்தில் சிறுவர்களை வாடிக்கையாளரிடம் அனுப்பி இலாபம் பெற்று வந்த குழுக்கள் இதிலும் வளர்ச்சி பெற்று உல்லாசப்பயணிகளோ அல்லது சிறுவருடன் உறவு கொள்ள விரும்பும் நபருக்கு சிறுவர்களின் பாலியல் நடவடிக்கைகளை படமாக்கி அந்தப் படங்களை இவர்களுக்குப் போட்டுக்காட்டி அப்படங்களிலிருந்து தான் விரும்பும் சிறுவர் அல்லது சிறுமியைத் தேர்ந்தெடுத்து அனுபவிக்கும் அளவிற்கு சிறுவர் விபச்சாரம் துரித வளர்ச்சி பெற்று விட்டதாம். இதில் மிகவும் வெட்கத்திற்கும் வேதனைக்கும் உரிய விடயம் எதுவெனில் சிறுவர் விற்பனையில் இன்று முதலிடம் பெற்றிருப்பது இலங்கைத்தீவு என்பதுதான். இங்குள்ள 5 சிறுவர்களுக்கு ஒருவர் பாலியல் துஸ்பிரயோகத்திற்குட்படுகின்றனராம். அதாவது மொத்த சிறுவர்களின் 20% இந்தப் பாதிப்பிற்குள்ளாகுகின்றனர்.

விபச்சாரத் தொழிலை மூன்று நிலைகளில் நாம் அடையாளம் காணமுடியும். (01) தனிப்பட்ட ரீதியில் வீடுகளில் இருந்து கொண்டே அடுத்தவர் அறியாதவாறு (?) விபச்சாரத் தொழிலை மேற்கொள்ளும் பெண்கள். பெரும்பாலும் வறுமை, சூழல்பாதிப்பு போன்றனவே இவர்களின் இத்தகைய போக்கிற்குக் காரணமாகக் கொள்ளப்படுகிறது. (02) சமூக ரீதியில் சிறுசிறு குழுக்களாகவோ அல்லது மிகப்பெரிய அமைப்பாகவோ விபச்சாரத் தொழிலில் ஈடுபடுதல்.

இது பெரும்பாலும் மறைமுகமாகவே மேற்கொள்ளப்படும். (03) போர்க்காலங்களில் இராணுவத்தினரைத் திருப்திப்படுத்தும் பொருட்டு பெண்களை விபச்சாரத்தில் ஈடுபடுத்தும் செயல்முறை. இதற்கு சிறந்ததோர் எடுத்துக்காட்டு இரண்டாம் உலகப்போர் காலத்தில் ஜப்பானிய வீரர்களின் பாலுணர்வுபசிக்குத் தீனியாக கொண்டு வந்து அடைக்கப்பட்ட ஆயிரக்கணக்கான ஆசியப் பெண்கள். இம்மூன்று நிலைகளிலும் ஆதிக்கம் செலுத்துவது கட்டாய விபச்சாரம்தான் ஒருதரம் பாலியல் வல்லுறவிற்கு உட்பட்ட பெண்ணுக்கு சமூகஅங்கீகாரம் கிடைக்காதபோது அவளது அடுத்தநிலை விபச்சாரி என்பதுதான். பெற்ற குழந்தைக்கு தீனி போட வழியற்ற அபலை இறுதியில் நாடுவது இத்தொழிலைத்தான். இவற்றை நிறுத்த வழியே இல்லையா என்று பொங்கி எழுபவர்களுக்கு உறுதியாகப் பதிலளிக்க முடியாத சிக்கல் வாய்ந்த விடயங்களில் இந்த விபச்சாரமும் ஒன்று.

## பாலியல் இம்சைகள்:

பாலியல் இம்சைகள் எனப்படுவது வீட்டிலோ அல்லது வேலைத்தலத்திலோ பெண்கள் மீது வேண்டுமென்றோ அல்லது அவர்களுக்கு அவமதிப்பை, அவமானத்தை அல்லது துன்பத்தை, அல்லது கடமையில் ஓர் இடையூறை, விரும்பத்தகாத சூழ்நிலையை ஏற்படுத்தும் வகையில் மீண்டும் மீண்டும் புரியப்படுகின்ற அநாவசியத் தொல்லைகள். பாலியல் ரீதியாகச் சிறுமைப்படுத்தும் சொற்றொடர்களை, கருத்துக்களை வெளியிடுதல், அவ்வாறானரீதியில் நடந்துகொள்ளல் என்பன பாலியல் இம்சைகள் எனக் கருதப்படுகின்றன.

அநேகமான குடும்பங்களில் பெண்கள் பாலியல் இம்சைகளுக்குள்ளாகுகின்றனர். ஓரேவீட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கும் சந்தர்ப்பங்களில் இது சகஜமாக நடைபெறுகின்றது. அக்காவின் கணவர் மனைவியின் சகோதரிகளைத் தவறான முறையில் அணுகும் சந்தர்ப்பங்கள் அநேகம். இது பாலியல் இம்சையாக ஆரம்பித்துக் காதலாக மாறிக் கல்யாணத்தில் முடிவதும் உண்டு. அக்கா குழந்தைப் பேற்றுக்குத் தயாரான நிலையில் இருக்கும் சமயம் இத்தகைய சந்தர்ப்பங்கள் அதிகரிக்கும் வாய்ப்பும் உண்டு. அல்லது மனைவி வேலைக்குப் போகும் சந்தர்ப்பங்களில் அல்லது மனைவி கணவனைப்புறக்கணிக்கும் சந்தர்ப்பங்களில் இத்தகைய செயற்பாடுகள் தோன்ற ஏதுவாகின்றன.

வேலைத்தலம் என்றால் உரிமை ஒருபடி கூடிவிடுகின்றது. எனக்குகீழ் பணிபுரிபவன் தானே, எனக்கெதிராக எவ்வாறு முறைப்பாடு செய்ய முடியும். அவ்வாறு செய்தால் தொழிலில் நிலைக்க நான் விட்டுவிடுவேனா என்று மேலதிகாரி நினைத்தால், சக ஊழியர்களின் அணுகுமுறையோ வேறுவிதமாக இருக்கும். தரக்குறைவான வார்த்தைகள் பயன்படுத்தினால் பெண்கள் அதை மற்றவர்களிடம் கூற வெட்கப்படுகின்றார்கள் என்றோ அங்க சேஷ்டைகள், தவறான அணுகுமுறைகள் என்பன பெண்களால் எளிதில் வெளியில் தெரியப்படுத்தப்படாது என்ற நம்பிக்கையே இவர்களை இது போன்ற செயற்பாடுகளில் துணிந்து ஈடுபட வைக்கின்றது.

எனினும் காலம் வேகமாக மாறிவருகின்றது. பெண்களும் துணிவுடன் முன்னேறி வருகின்றனர். தன்னுடன் சேஷ்டைவிடும் ஆணைத் தைரியமாக எதிர்க்கும் மனத்துணிவைப் பெண்கள் பெற்றுவருகின்றனர் என்பதற்கு ஏராளமான எடுத்துக்காட்டுகள் உண்டு. எனினும் கூலித்தொழிலாளர்கள், மிகவும் வறுமைப்பட்ட தொழிலாளர்கள் இந்த பாலியல் இம்சைகளைப் பொறுத்துக் கொண்டே ஆகவேண்டி உள்ளது. சுதந்திரவர்த்தக வலயத்தில் இரவுவேளையிலும் வேலை

யில் ஈடுபட வற்புறுத்தப்படும் பெண்களுக்கு வேலைத்தலத்தில் தான் இந்த இம்சை என்றால் வேலை முடிந்து வரும்வழியிலும் பின்னால் வருபவர்களின் தொல் லைகள் பொறுக்கமுடியாதள விற்கு கூடிவருகின்றதாம். கடை களில் வேலைபார்க்கும் பெண்க ளும் இந்தப்பிரச்சனையிலிருந்து தப்பமுடிவதில்லை. அதிகவே லை, குறைந்தகூலி என்பதுதான் பெண்களின் பிரச்சனை, இந்த இம்சைகளைப் பொறுத்துக் கொண்டு வேலைக்கும் தொ டர்ந்து செல்லவேண்டிய நிலைப் பாட்டில் இருப்பது உண்மையில் பெண் இனத்திற்கோர் சாபக் கேடாகவே இருக்க முடியும்.

சுருக்கமாக நோக்குமிடத்து ஒரு பெண்ணானவள் கருப்பையில் இருக்கும் காலம் தொட்டு புதை குழிக்குச் செல்லும் காலம் வரைக் கும் வன்முறையின் பலிக்கடாவா கவே இருந்து வருகிறாள். பிறக் கப்போகும் குழந்தை பெண்ணா ஆணா என்பதை முன்கூட்டியே அறிந்துகொள்ள எமது அறிவி யல் வளர்ச்சி துணைபுரிவதன் காரணமாகப் பெண் சிசுவெனக் கண்டு பிடிக்கப்படுமிடத்து கருப் பையில் வைத்தே அதனை அழித்து விடுகின்றார்கள். பிள் ளைபருவம் என்றுவரும் போது உலகில் சிறுவர் வியாபாரம், சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் என்பன பெண் சிறுமிகளையே கூடுதலாகப் பாதிக்கின்றது. ஐ. அமெரிக்கா, கனடா, நோர்வே, நியூலாந்து, நெதர்லாந்து, பார்ப் படோஸ் ஆகிய நாடுகளில்மூன்று பெண்பிள்ளைகளுக்கு ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்குட் படுகின்றனர் என ஐ. நா. மனித மேம்பாட்டு அறிக்கை (1995) தெரிவிக்கின்றது. இலங் கையில் ஐந்து சிறுவர்களுக்கு ஒரு சிறுவன் பாலியல் துஷ்பிரயோ கத்திற்கு உட்படுகின்றான். ஆசி யாவிலும் மற்ற இடங்களிலும் சுமார் பத்து லட்சம் பிள்ளைகள் ஒவ்வொரு வருடமும் விபச்சாரத் தில் ஈடுபட வற்புறுத்தப்படுகின் றனராம். உலகம் முழுவதிலும் இலட்சக்கணக்கான பெண்பிள் ளைகளின் பிறப்புறுப்பு வெட்டப் படுகின்றது.

வயதுவந்த பருவத்தில் ஆதா வது திருமணம் முடிந்த பின்னர் வீட்டுவன்முறைகளால் பாதிக்கப் படுகின்றவர்கள், பாலியல்வல்லு றவிற்குட்படுகிறவர்கள் என மிக அதிகமானோர் உள்ளனர். போ ராட்டங்கள் நடக்கும் தேசங்கள் அனைத்திலும் பாலியல் வல்லு றவு சாதாரண நிகழ்வு. இவர் களை அரசாங்கம்கூடக் கண்டு கொள்வதில்லை.

முதுமைப்பருவத்தில் கணவ னால கைவிடப்படுகின்றவர்கள், கணவனால் கொலை செய்யப் படுபவர்கள், கணவனின் கொ டுமை தாங்காமல் தாமே தற் கொலை செய்பவர்கள் மிகக் கூடு தலாக உள்ளனர்.

பெண்கள் வன்முறையின் பலிக் கடாக்களாக இருப்பதிலிருந்து

தடுக்கப்பட முடியுமா? மகளிர் அமைப்புக்களின் செயற்பாடுகள், பெண்களுக்கிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் பலவித நடவடிக்கைகள் போன்றன உலகம் முழுவதிலும் மேற்கொள்ளப்பட்டபோதும்கூட பெண்கள் வன்முறைக்குப் பலியாகும் நிகழ்வைத் தடுக்கவோ அல்லது கட்டுப்படுத்தவோ முடியவில்லை. ஆயிரக்கணக்கான வருடங்களாகப் பெண்ணினம் வன்முறைக்கு ஆளாகியிருப்பினும் இப்பிரச்சனை அண்மைக்காலங்களில்தான் அனைத்துலக கவனத்தைப் பெற்ற விடயமாக மாறியது. வன்முறையை இல்லாதொழிப்பது தொடர்பான தனது அபிப்பிராயத்தைத் தாய்லாந்துப் பெண்கள் அமைப்பின் இயக்குனரான சிறிபொன் ஸ்குரோபான்ஸ் என்பவர் பின்வருமாறு கூறுகின்றார்:

“30 வருடங்களுக்கு முன்பு வன்முறை தொடர்பான விடயத்தைப் பெண்கள் குழுக்கள் முன்வைத்தபோது குடும்ப அமைப்பைச் சிதைக்கும் பிரச்சனைக்காரர்களாக இவர்கள் முத்திரைகுத்தப்பட்டனர். கடந்த 10வருடங்களுக்கு முன்பு கணவரால் தாக்கப்பட்டவர்களுக்கான இல்லம் ஒன்று பாங்கொக்கில் தாய்லாந்துப் பெண்கள் அமைப்பு ஆரம்பித்த போது இது விவாகரத்தை ஊக்குவிக்கும் செயல் என்ற கடுமையான விமர்சனத்தை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. எனவே இத்தகைய தவறான மனப்போக்கு இருக்கும் வரை சட்டங்கள் மூலம் இந்த வன்முறை களையப்பட முடியும் என்று நினைப்பது சாத்தியமற்றதொன்றாகும். இதற்கு எந்தவொரு சமூகமும் விதிவிலக்கல்ல.” □


மிதிவண்டி, உந்துருளி உதிரிப்பாகங்கள்

மற்றும் எரிபொருட்களை

உடனுக்குடன் பெற்றுக்கொள்ள

மிகச் சிறந்த இடம்

# “நந்தன் வர்த்தக நிலையம்”

பிரதான வீதி

ஜெயபுரம்

உரிமையாளர் - நந்தகுமார்

# சுயதொழில் - 4

## நமது வாழ்வு நம் கையில் ...

## ஜீவ ஊட்டம்

ஜீவ ஊட்டம் உள்ளூரில் கிடைக்கும் தானியங்களைக் கொண்டு தயாரிக்கப்படும் சத்துணவு. சிறுகுழந்தைகள் முதல் பெரியோர் வரை உண்பதற்கு ஏற்றமுறையில் இச்சத்துணவு தயாரிக்கப்படுகிறது. தமிழர் பிரதேசங்களில் சிறீலங்கா அரசு முன்பு வழங்கிவந்த 'திரிபோசா' சத்துணவை தடைசெய்தது. எனவே தடைசெய்யப்பட்ட 'திரிபோசா'வுக்குப் பதிலீடாக ஜீவ ஊட்டம் எமது பிரதேசத்தினுள்ளேயே தயாரிக்கப்படுகிறது. சிறுகுழந்தைகள், கர்ப்பிணித்தாய்மார், பாலூட்டும் தாய்மாருக்கு இவ்வுணவு மிகுந்த பலனைத் தருகிறது.

வைத்திய வட்டாரங்களின் ஆலோசனையின் பேரில் தயாரிக்கப்படும் ஜீவ ஊட்டமானது ஒரு நிறையுணவாகக் கொள்ளப்படுகிறது. தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் உழைப்பாளர்களை இழந்த பெண்களின் சுயதொழில் முயற்சியடிப்படையில் செய்யப்படும் இச் சத்துணவானது வீடுகள் தோறும் சுயதொழில் முயற்சியாகவே செய்து நிறைந்த பயனை அடையலாம்.

இந்த இதழின் சிறு 'சுயதொழில் முயற்சி' அறிமுகமாக ஜீவ ஊட்டம் உங்கள் முன் அறிமுகமாகிறது.

எமது பிரதேசத்திலேயே கிடைக்கப்பெறும் தானியங்களான அரிசி, பயறு, உழுந்து, எள்ளு, கௌப்பி என்பன இதற்குப் பயன்படுத்தப்படுகிறது. ஒரு கிலோகிராம் ஜீவ ஊட்டப் பக்கற் ஒன்றைத் தயாரிக்க தேவையான தானிய வகைகளைத் தருகின்றோம்.

இதனடிப்படையில் 650 கிராம் புழுங்கலரிசியை கழுவி காயவைத்து- வறுத்து பொரி அரிசியாகச் சேர்க்கப்படல் வேண்டும். இதேபோல் உழுந்து 200 கிறாம், பயறு 40 கிறாம் கௌபி 100 கிறாம், எள்ளு 10கிறாம், என்பவற்றை வறுத்து-

தோல் நீக்கி எல்லாவற்றையும் சேர்த்து கலந்து மாவாக்க வேண்டும். இவற்றை திரிகையில் இட்டோ அன்றி மெசினில் அரைத்தோ ஒவ்வொருவரும் வசதிகளுக்கேற்ப மாவாக்கிக் கொள்ளலாம்.

இவ்வாறு மாவாக்கி பக்கற்றுகளில் அடைக்கும் செலவானது 1 கிலோவுக்கு அறுபத்திரண்டு ரூபா வீதம் ஏற்படுகிறது. இதனடிப்படையில் சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுவோர் தங்கள் முயற்சிக்கேற்பவும் கேள்விக்கேற்பவும் விற்பனைத் தொகையை லாபநோக்கில் தீர்மானித்துக் கொள்ளலாம்.

இம்முயற்சியானது ஓய்வாக இருக்கும் நேரங்களில் பக்க வருமானத்தை சேகரிக்கும் நோக்கோடு உங்கள் வீடுகளில் தொடங்கலாம். பெருமளவிலான சுயதொழிலாகவும் தொடங்கலாம். சிறுதுளி பெருவெள்ளமாய் சிறுகச்சிறுக சேர்க்கும் வருமானத்தோடு எமது பிரதேசத்தின் போசாக்கின்மையை தீர்க்கும் சிறு தொழில் முயற்சியாகவும் இது அமைகிறது. நிறையுணவைப் பெறவும் வருமானத்தை ஈட்டவும் நீங்களும் முயற்சி செய்யுங்களேன். □


அழகிய தங்கப்பவுண் நகைகள் செய்து பெற்றிடவும்

நீங்கள் விரும்பும் வடிவங்களில்

உடனுக்குடன் பெற்றுக்கொள்ளவும்

நாடவேண்டிய இடம்

புஸ்பதயா நகைப்பூங்கா

உத்தரவாதம், நம்பிக்கை, உயர்தரம்

தவறாது நாடவேண்டியது

புஸ்பதயா நகைப்பூங்கா

பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

# களை எடுப்பு

செல்வி K. வேணி
புதுக்குடியிருப்பு

**அன்பான ' நாற்று ' அவர்களுக்கு K. வேணி ஆகிய எனக்கு சிறு சந்தேகம் பலமாதங்களாக உள்ளது. ஆனால் யாரிடம் கேட்டு தீர்வு காண்பது என்று ஒரே யோசனை. என்னவென்று கேட்கின் றீர்களா ?**

**எனக்கு மாதவிடாய் வரும்போது இடதுபக்க நாரிக்குத்தும் நோவும் சரியான வலியாகவும் இருக்கும. மாதவிடாய் வந்ததும் என்னால் கதைக்க முடியாது. பெரிதாக சிரிக்க முடியாது. நடக்க முடியாது. இப்படி இரண்டு நாட்கள் நான் படும் வேதனை சொல்ல முடியாது. இப்போது சில மாதங்களாக அந்த நோ, குத்து கூடுதலா இருக்கு. இதை வைத்தியர்களிடம் சொல்லி மருந்து வாங்க வெட்கத்தினால் வைத்தியசாலைக்கு போறதில்லை. இதற்கான ஆலோசனையை எனக்கு வழங்குமாறு கேட்டுக்கொள் கின்றேன்.**

*அன்புச் சோதரியே!*

*நீங்கள் உங்கள் கடிதத்தில் உங்கள் வயது என்னவென்று குறிப்பிடவில்லை. அத்துடன் இவ்வயிற்றுவலி சிலமாதங்களாக கூடுதலாக இருக்கிறது என்று குறிப்பிட்டுள்ளீர்களே தவிர எவ் வளவு காலமாக இருக்கிறது என்று குறிப்பிட வில்லை. மேலும் மாதவிடாய் மாதாமாதம் ஒழுங்காக வருகிறதா இல்லையா என்ற தகவலும் உங்கள் கடிதத்தில் இல்லை. ஏனென்றால் இம் மாதவிடாயின்போது ஏற்படுகிற வயிற்றுவலியில் இரண்டு வகைகள் உண்டு. இதில் ஒன்று,*

*முதல்தரமான மாதவிடாய் வயிற்றுவலி ஆகும்.*
( Primary Dysmenorrhoea )

*இவ்வயிற்றுவலியானது பொதுவாக பரம்பரையாக ஏற் படுகின்றது. அதாவது தாயிற்கு இருந்தால் மகளுக்கு வர வாய்ப்புண்டு. மேலும் இவ்வயிற்றுவலி பூப்பெய்திய காலம்*

தொட்டு மாதாமாதம் வந்துகொண்டேயிருக்கும். அத்துடன் இவ்வயிற்றுவலியானது குருதிப்பெருக்கு ஏற்படுவதற்கு ஒரு சில மணித்தியாலங்களுக்கு முதல் ஆரம்பித்து ஒன்று அல்லது இரு தினங்களுக்கு நீடிக்கும் போது இவ்வயிற்றுவலியுடன் நாரி உளைவு, தலைச்சுற்று, வாந்தி போன்றவை பொதுவாக சேர்ந்து காணப்படும். சில சமயம் சிலருக்கு இவற்றுடன் வயிற்றோட்டமும் சேர்ந்து காணப்படும் இம் முதல்தர வயிற்றுவலியானது அனேகமாக திருமணமாகி குழந்தை பிறந்ததும் அற்றுப்போய்விடுகிறது. எனவே அதிகம் கவலைப்படத்தேவையில்லை. இவ்வயிற்றுவலி வரும் முதல்நாள் வேதனை கடுமையாக இருந்தால் பனடோல் அல்லது பொன்ஸ்ரன் (Ponstan) குளிசையில் இரண்டையும் போட்டால் போதும் வலி குறைந்துவிடும். ஒவ்வொரு மாதமும் போடவேண்டும்.

மேற்படி மருந்துகளினால் மாதவிடாய் குருதிப் பெருக்கில் எதுவித பாதிப்பும் ஏற்படுவதில்லை.

இதற்கு மாறாக இவ் மாதவிடாய் வயிற்று வலியானது பூப்பெய்திய காலம் தொட்டு வராமல் இடையில் ஒரு சில மாதங்களாக வரத்தொடங்கியிருந்தால் இதனை இரண்டாம் தரமான மாதவிடாய் வயிற்றுவலி (Secondary Dysmenorrhoea) என அழைக்கப்படுகிறது இவ்வயிற்றுவலியானது இனப்பெருக்க உறுப்பில் தொற்று, இப்னபெருக்க உறுப்புக்களில் அசாதாரண வளர்ச்சிகள் (கட்டிகள்) ஏற்பட்டிருந்தால் வர சாத்தியமுண்டு. எனவே இவ் வகையான வயிற்றுவலி உள்ளவர்கள் ஓர் ஆங்கில மருத்துவரின் ஆலோசனையைப் பெறுவது சாலச் சிறந்தது. □


மங்கையரும் ஆடவரும் மனம் விரும்பும்
ஆடைகளைப் பெற்றுக்கொள்ளவும்
அனைத்து வயதினர்க்கேற்ப விருப்பமான
உடைகளைத் தெரிவு செய்யவும்

நாடவேண்டிய இடம்

“ரகினி புடவையகம்”

நாச்சிக்குடா சந்தி, முழங்காவில்,
உரிமையாளர்: அ. யேசுராசன்

# நேர்காணல்

## திருமதி அற்புதமலர் சோமசுந்தரம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பல கரையோரப் பிரதேசங்களில் ஒன்று வலைஞர் மடம் என்ற கிராமம். புதுக்குடியிருப்பில் இருந்து ஐந்துமைல் வடகிழக்கே அமைந்திருக்கும் இக்கிராமத்தில் வாடிவீடு அமைத்து மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வருபவர் திருமதி அற்புதமலர் சோமசுந்தரம் அவர்கள். சம்மாட்டித் தொழிலில் ஒரு பெண் ஈடுபடுவது எமக்குப் புதுமையானதாகத் தென்பட இவரை நாற்று வாசகர்களுக்கு அறிமுகம் செய்யும் நோக்குடன் வலைஞர்மடம் கிராமத்தை அணுகினோம்.

காலை 8.30 மணியளவில் வலைஞர்மடம் கிராமத்தை அடைந்து, இவரது வாடிவீடு அமைந்துள்ள இடத்தைக் கேட்டறிந்து கொண்டு அங்கு சென்றோம். அங்கொன்றும் இங்கொன்றுமாக பெரிதும் சிறிதுமாக ஆறேழு கொட்டில்கள், பனையோலைகளால் சிலவும் தென்னோலைகளால் சிலவும் வேயப்பட்டு மிகவும் ஒழுங்காகவும் நேர்த்தியாகவும் சுற்றிவர அடைக்கப்பட்டிருந்த அந்த கொட்டில்களைச் சுற்றிவர பெரிதும் சிறிதுமாகப் பல தென்னை மரங்களும், இப்போதுதான் நிழல்பரப்பத் தொடங்கியிருக்கும் வேப்ப மரங்களும், அது ஒரு தற்காலிக இருப்பிடம் அல்ல நிரந்தர வசிப்பிடம் என்பதைப் பறைசாற்றின. இக்கொட்டில்களைக் கடந்து கடற்கரையை அண்மித்தபோது கடற்தொழிலாளர்களுக்கே உரிய பாடல் ஒன்றை இசைத்தபடி இருபுறமும் பத்துப் பன்னிரண்டு தொழிலாளர்கள் கரைவலை இழுத்துக் கொண்டிருக்க வள்ளம் ஒன்று வலையை வளைத்துக் கொடுத்து உதவிக்கொண்டிருந்தது. அங்கொன்றும் இங்கொன்றுமாக 5 வள்ளங்களும் பல வலைகளும் ஏனைய மீன்பிடி உபகரணங்களும் ஒழுங்காக வைக்கப்பட்டிருந்தன. இவை அனைத்துமே அற்புதமலர் தம்பதிகளின் 19 வருட வலைஞர்மட வாழ்க்கையின் பிரதிபலிப்புகள்தான்.

தொழிலாளர்களை அனு உங்கள் முதலாளி அம்மாவைப் பார்க்க விரும்புகின்றோம் எனத் தெரிவித்தபோது அவரின் குடிசையைக் காட்டி அங்குபோய் பார்க்குமாறு கூறினார்கள். அக்குடிசைக்கு வந்து குரல் கொடுத்தபோது, வாங்கோ என வரவேற்றபடியே வெளியே வந்தார் திருமதி அற்புதமலர்.

"சம்மாட்டிமாருக்கே இயல்பான அகன்ற பெரிய தோற்றம், தனக்குக்கீழே தொழில் பார்ப்பவர்களை இயல்பாகவே கட்டுப்படுத்தக் கூடிய ஆளுமையுடன் கூடிய நடை, எவ்வளவுதான் அதிகார தோரணை என்னிடம் இருந்தாலும் நான் ஒரு பெண், அதுவும் அன்பு, பணிவு, இரக்கம்போன்ற பெண்மையின் அனைத்து அம்சங்களும் எனக்குண்டு எனக்கூற வைக்கும் அமைதியான முகம். எப்போதுமே இலாபநோக்கம் தான் முதலாளிவர்க்கத்தின் அடித்தளம் என்றாலும் எனக்கு அதில் பெரியளவு ஈடுபாடு இல்லை எனக் கூற



வைக்கும் எளிமையும், சுத்த முமான சூழல். இவை அனைத்தும் ஒன்றிணைந்தவர்தான் நாற்று இதழில் இம்முறை நீங்கள் சந்திக்கும் திருமதி அற்புதமலர்''

தன்னைப்பற்றி அறிமுகம் செய்யும்போது ''எனது சொந்த இடம் புத்தளம் மாவட்டத்திலுள்ள உடப்பு என்னும் கிராமம். எனது தந்தையார் மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தில் வேலை செய்தவர். ஒரு அக்காவும் தங்கையுமாக எனது வீட்டில் மூன்று பெண் குழந்தைகள்தான். எனது அக்கா 11வயதாக இருக்கும் போதே அப்பா பாரிசவாத நோயால் இறந்துவிட அம்மா தான் மிகுந்த கஷ்டப்பட்டு எங்களை வளர்த்தவர். வீட்டுக்கஷ்டத்தால் என்னால் 4ம் ஆண்டு வரையே படிக்க முடிந்தது. நசம் சிறுவயதில் பட்ட கஷ்டத்திற்கு நாங்கள் மூவரும் நல்ல கணவர்களைப் பெற்று வசதியாக வாழ்கின்றோம்,,'' எனக்கூறுகிறார் 46வயது நிரம்பிய அற்புதமலர்.

☆ அவரது குடும்பம் பற்றி கேட்டபோது

''எனக்கு 21 வயதில் திருமணம் நடந்தது. எங்களுடைய காதல் திருமணம், எனது கணவரும் எனது ஊரை சேர்ந்தவர்தான், தனது 12 வயதிலேயே வலைஞர்மடம் கிராமத்திற்கு வந்து சிங்களசம்மாட்டி ஒருவரின் கீழ் கூலியாளாக இருந்த இவர், என்னை திருமணம் முடித்தபின் தான் தனித்தொழில் செய்ய ஆரம்பித்தார். சிறிது சிறிதாக முன்னேறி 35 பேரை வைத்து தொழில் நடத்துமளவிற்கு வளர்ச்சியடைந்தார். 1988 ல் மலேரியா காய்ச்சல்வந்து அவரை பலிவாங்கிவிட்டது என தெரிவித்தார்.

★ உங்கள் பிள்ளைகள் .....

எனக்கு 5 ஆண் பிள்ளைகள். எல்லோருமே படிக்கின்றார்கள். மூத்தவர் படித்துவிட்டு இருக்கின்றார். அவரை இங்கு அழைத்து வந்து இந்த தொழிலை பழக்கலாம் என்றால் போர்க் கால சூழ்நிலை தடையாக இருக்கின்றது. இவர்கள் எனது சகோதரியின் பராமரிப்பில் இருக்கின்றனர். நான் வருடத்தில் மூன்று மாதங்கள் உடப்புக்கு போய் அங்கு பிள்ளைகளுடன் தங்கியிருந்து வருவேன்.

★ ஆண்கள் மட்டுமே முழுக்க முழுக்க ஈடுபடும் சம்மாட்டித் தொழிலில் தனியொரு பெண்ணாக, கணவன் இன்றி பிள்ளைகளின் உதவியுமின்றி ஈடுபடுகின்றீர்களே? கஷ்டமாக இல்லையா என கேட்டோம்.

'' என்ன செய்வது வாழ வேண்டும் என்று நினைத்தால் கஷ்டங்களை எதிர்நோக்கியே

ஆக வேண்டும். எமது ஊரில் தொழில் வாய்ப்பு குறைவு. அங்கிருந்துஇங்கு வந்து நாம் தொழில் செய்ய தொடங்கி 19 வருடங்கள் ஆகின்றன. கணவர் அதற்கு முதலே இங்கு வந்து தங்கிவிட்டார். நாமும் தொழிலுக்கு தேவையான அனைத்து உபகரணங்களையும் வாங்கி இங்கு சேர்த்துவிட்டோம். இவற்றை விட்டுவிட்டு போகவும் முடியாது. கணவர் இறந்தபின் மிகுந்த கஷ்டப்பட்டேன். ஆனாலும் அவர் உயிருடன் இருக்கும் போதே எனக்கு கற்று தந்த தொழில் நுணுக்கங்கள் எனக்கு பெரியளவில் உதவியாக இருக்கின்றன.



★ *கணவரின் ஒத்துழைப்பு எவ்வளவு தூரம் இருந்தது... —*

அவர் மிகுந்த முற்போக்கு எண்ணம் உடையவர். என்னை திருமணம் செய்யும் போது சீதனம் என்று எதையுமே அவர் கேட்கவில்லை. அவர் முதலாளியாக இருக்கும் போது இத் தொழிலுக்கு வேண்டிய அனைத்து நுணுக்கங்களையும் எனக்கு பழக்கிவிட்டார். லொறியில் கருவாடு ஏற்றி புதுக்குடியிருப்புக்கு கொடுத்து விட்டு வருவது, சந்தைக்கு மீன் கொண்டுபோய் மொத்தவிலைக்கு கொடுத்துவிட்டு வருவது, மீனுக்குரிய மொத்தப்பணத்தை கூட்டுத்தாபனத்தில் இருந்து பெற்று வருவது எல்லாம் நான் தான்.

சமையலுக்கு ஆட்கள் வைத்துவிட்டு தனக்கு உதவியாக நிர்வாக வேலைகளில் வைத்துக்கொள்ளும் அளவிற்கு அவருக்கு முற்போக்கு எண்ணம் இருந்தது. அவர் கற்றுத் தந்ததை தான் இன்று எனக்கும் என் பிள்ளைகளுக்கும் இந்த தொழிலாளருக்கும் சோறு போடுகின்றது.

★ *உங்களுடைய தொழில் பற்றி விவரமாக கூறுங்கள் என கேட்டபோது,*

•* கரைவலை மீன்பிடித்தல் தொழிலில் தான் நாம் ஈடுபடுகின்றோம். என்னுடன் சேர்ந்து 34 பேர் இப்போது தொழில் செய்கின்றனர். இவர்களுக்கு 3 நேர உணவும் நாளொன்றுக்கு 100 ரூபாவும் கொடுக்கின்றேன். இதில் ஆண்கள் 29 பேர்; பெண்கள் 5 பேர். மீன்படுவதைப் பொறுத்து ஒரு நாளில் 2 — 5 தடவைகள் கரைவலை இழுப்போம். முன்பு தொழில் நன்கு நடந்தது. முன்பு மடிக்கணக்கில் (அதாவது ஒரு மடியில் 8 கூடை மீன் வரும்) 20 — 25 மடி வரை மீன் படும். ஆனால் இப்போது கிலோக்கணக்கில் தான் மீன் படுகின்றது. சில சமயங்களில் ஒரு நாளில் 5 கிலோ மீன் கூட படாத நாட்களும் உண்டு. ஆனாலும் தொழிலாளர்களுக்கு நாம் சம்பளம் கொடுத்தே ஆக வேண்டும். மீன்கள் அதிகமாக படும் நாட்களில் விற்றது போக மீதியை கருவாடு போடுவோம். பெரும்பாலும் மீன்களை வியாபாரிகள் இங்கு வந்தே வாங்கிச் செல்வார்கள். அதிகமாக வந்தால் நாமும் கொண்டுபோய் சந்தையில் கொடுத்து வருவோம்.

அற்புதமலரிடம் தொழில் பார்ப்பவர்கள் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள், உடப்பிலிருந்து இங்கு வந்து இவருடன் தொழில் செய்பவர்களும் நிறைய உண்டு. பெண்கள் ஐவருமே உடப்பைச் சேர்ந்தவர்கள் தான். ஒவ்வொரு வருடமும் ஐப்பசி மாதமளவில் இங்கிருந்து தமது சொந்த இடத்

திற்கு போய் பிள்ளைகளுடன் இருந்துவிட்டு மீண்டும் மாசி மாதமளவில் இங்கு வருவார்கள். இம் மூன்று மாதங்களும் மீன் பிடிப்பதற்கான காலம் அல்ல என்பதால் இவர்கள் எல்லாவற்றையும் கட்டி வைத்துவிட்டு காவலுக்கு ஆளும் வைத்துவிட்டு உடப்பிற்கு சென்றுவிடுவார்கள். கடந்த 19 வருடங்கள் இதுதான் வாழ்க்கை.

"வாழ்க்கையில் நான் எதிர்நோக்கிய கஷ்டங்கள் சொல்லில் அடங்காது. கணவனுடன் வாழ்ந்த 15 வருடங்களும்தான் நான் சந்தோஷமாக இருந்த நாட்கள்.

கணவர் என்னை விட்டு மறைந்த போது எனது கடைசி மகனுக்கு 8 மாதம் தான். சின்னஞ் சிறு குழந்தைகளையும் வைத்துக் கொண்டு கணவரின் தொழிலை தொடர்ந்து நடத்த மிகவும் சிரமப்பட்டேன்.

எனினும் தொழில் பற்றி ஏற்கனவே நான் பெற்ற அனுபவங்கள் தான் என்னை தலை நிமிரச் செய்திருக்கின்றது. இன்று என்னை ஒரு பொருட்டாக மதித்து நீங்கள் தேடி வருவதற்கு நான் எதிர்கொண்ட கஷ்டங்கள் மிகவும் அளப்பரியது" என கூறுகின்றார் அற்புதமலர்.

எவ்வளவுதான் வாழ்வின் பெரும்பகுதி வலைஞர் மடத்தில் கழிந்தாலும் அற்புதமலரின் உள்ளத்தை நிறைந்திருப்பது அவரது சொந்த இடமான உடப்பு கிராமத்தின் நினைவுகள் தான். எதைக்கதைக்கத் தொடங்கினாலும் அங்கு உடப்பு கிராமமும் தவிர்க்க முடியாதபடி நுழைந்துவிடும். தொழில் என்ற ஒன்றுக்காகவே பிள்ளைகள், சொந்த வீடு வளவு, உறவுகள் எல்லாவற்றையும் விட்டு இங்கு வந்து தங்கியிருக்கின்றார்.

நீங்கள் வாழும் இரு இடங்களிலும் வாழும் பெண்கள் பற்றிய உங்கள் அபிப்பிராயத்தை கூறுங்கள் எனக்கேட்டோம்.

'இங்கு நான் பார்க்கும் பெண்களுக்கும் எங்கள் ஊர்ப் பெண்களுக்கும் பாரிய வேறுபாடு உண்டு. எங்கள் ஊரில் ஆண்களுக்கு நிகராக பெண்கள் வேலை செய்கின்றார்கள். குமர்ப்பிள்ளைகள் கூட தமக்கு தேவையான உடுபுடவைகளுக்கும், நகைகளுக்கும் தாமே உழைக்கின்றனர்.

எமது ஊரில் தொழில் இல்லாத காலங்களில் பக்கத்து ஊர்களுக்கு பஸ் ஏறிச் சென்று அங்கு வாரம் முழுவதும் வேலை செய்து வார இறுதி நாளுக்கு வீடு வருவார்கள். உப்பு சுமக்கும் வேலை, கார்மென்ஸ்தொழில், இறால் வளர்ப்பு திட்டத்தில் வேலை,

வயல் வேலைகள் என்று எதிலுமே அவர்கள் பின் நிற்பதில்லை. அடுத்தவர்களை நம்பி அவர்கள் இருப்பதில்லை. கல்யாணம் செய்தபின்னர் கூட அவர்களின் உழைப்பின் ஒரு பங்கு குடும்பத்தை தாங்கும். பிள்ளைகளை பெற்று கல்யாணம் செய்து கொடுத்தபின்னர் கூட யாரிலும் தங்கிவாழாது 60-65 வயதிலும் உழைக்கும் பெண்கள் எமது ஊரில் ஏராளம் இதற்கு எடுத்துக்காட்டு இதோ என்று அங்கு வேலை செய்து கொண்டிருந்த 65-70 வயது மதிக்கத்தக்க மூன்று வயோதிப பெண்களைச் சுட்டிக்காட்டினார் ஒரு நாளைக்கு 50-60 வாளி குடி தண்ணீர் அள்ளுவதிலிருந்து கருவாடு காயவைக்கும் வேலை வரை இப்பெண்களே மேற்கொள்கின்றார்களாம்.

ஆனால் இதற்கு மாறாக இங்கு வசிக்கும் பெண்கள் குறிப்பிட்ட சிறுவீதமே குடும்பச்சுமையை தாங்குகின்றார்கள். பெரும்பாலான பெண்கள் கணவன் உழைத்து வர வேண்டும் என்ற எதிர் பார்ப்பில் வீட்டிற்குள் அடைந்து கிடப்பவர்கள் தான். இங்குள்ள பட்டினிச் சாவுக்கு முழுக்க முழுக்க பெண்கள் தான் காரணம்.

என உணர்ச்சி வசப்பட்டு கூறுகின்றார் அற்புதமலர். கணவன் கொண்டு வருவதை சமைத்து வைத்துவிட்டு ஊர்ப் புதினங்களை அலசுவதில் கூடிய நேரத்தை செலவிடும் பெண்கள் உங்கள் ஊரில் அதிகம். எமது பிள்ளைகளை நாம் தான் பராமரிக்க வேண்டும். கணவனின் உழைப்பில் நாமும் பங்கு கொண்டு குழந்தைகளை வளர்க்க வேண்டும் என்கிறார்.

ஒரு மனிதனின் வளர்ச்சியில் சூழலின் தாக்கம் முக்கிய பங்கு வகிக்கின்றது. இவர் சம்மாட்டியாக விளங்குவது எமக்குத் தான் புதுமையாக தெரிகிறது. ஆனால் பெண்கள் அதிகமாக தமது காலில் தங்கி வாழும் உடப்பு கிராமத்தை பொறுத்த வரைக்கும் இத் தொழில் புதுமையானதல்ல வன்னி கடற்பிரதேசங்களில் வாழும் பெண்களுக்கும் எமக்கும் தான் இவர் புதுமையானவராக காட்சியளிக்கிறார்.

நாம் உரையாடிக் கொண்டிருக்கும் போதே, அங்கு நடப்பவற்றையும் பதிவு செய்ய நாம் தவறவில்லை. தொழிலாளர்கள் வலையை இழுத்து கரைக்கு வந்ததும் ஆக 8 கிலோ மீன்கள் மட்டுமே பிடிபட்டிருந்தன. வியாபாரி ஒருவர் அதை பெறுவதற்காக வந்து காத்துக்கொண்டிருந்தார். பெண்கள் தொழிலாளர்களுக்கு தண்ணீர் எடுத்துச் சென்றார்கள். சமையல் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆண் ஒருவரே சமையலுக்கு பொறுப்பாக இருக்கிறார். சமையலறை மிகவும் சுத்தமாக, ஒழுங்

ஆக இருந்தது. பாத்திரங்களும் மிகவும் தூய்மையாக இருந்தன. தொழிலாளர்களுக்கு மூன்று நேர உணவும் மீனும் சோறும் தான். மதிய உணவை எல்லோரும் சாப்பிட்டதும் அவர்களுக்கென்று அமைக்கப்பட்ட ஒரு கொட்டிலில் அனைவரும் ஓய் வெடுத்தார்கள். சிலர் காட்ஸ் விளையாடினார்கள். சிலர் குட்டித்தூக்கம் போட்டனர். சிலர் அரட்டையடித்தனர். ஒருவர் மாறி ஒருவர் மீன் வருகின்றதா என கடலை உன்னிப்பாக நோக்கியபடி இருந்தார். இருந்தாற் போல் எல்லோரும் எழும்பி தயாராகினர். கரைவலையை போடும் வேலை தொடங்கியது. அவர்களிடம் வேலையை குழப்பாமலேயே சிறிது உரையாடினோம்.

எங்களுடைய வேலையை கவனிப்பதற்கு மண்டாடி என ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் இல்லாத போது அதற்கு அடுத்தவர் என இன்னொருவரை காட்டினார்கள். இவ்வாறு வேலைகள் அவரவர்களுக்கென பிரித்து கொடுக்கப்பட்டிருந்த தால் எமக்கிடையே எவ்வித பிரச்சினைகளும் எழுவதில்லை. எமக்கு பணக்கஷ்டம் இருந்தால், ஊருக்கு போவதென்றால்; ஏதாவது மனக்குறை இருந்தால் மட்டுமே சம்மாட்டி அம்மாணிடம் செல்வோம். மற்றும்படி எமக்கு எவ்வித பிரச்சினைகளும் ஏற்படலாம் அவர் பார்த்துக் கொள்வார் என கூறுகின்றனர் இவரது தொழிலாளர்கள்.

இவரது கிராமத்தில் மறுமணம் செய்வது என்பது மிகவும் அரிதாம். அதுபோல் ஆண்கள் இரு கல்யாணம் செய்வதும் மிகவும் அருமையாம் பொதுவாக உடப்பு கிராமத்தில் ஆண்களது சராசரி ஆயுட்காலம் 40 ஆண்டுகள் தான் என கூறும் அற்புத மலர், இதற்கு காரணம் குடி போதை தான் என்கிறார். கணவன் இளம் வயதில் இறந்தாலும் அங்கு மறுமணம் செய்வது மிகவும் குறைவாம். இயல்பிலேயே உழைக்கும் வல்லமை பெற்றவர்களாக இப்பெண்கள் இருப்பதும் கணவன் இறந்தபின் குடும்ப பாரத்தை தாங்குவதன் எவ்வித சிரமத்தையும் அவர்களுக்கு ஏற்படுத்துவதில்லை. அவ்வாறு மறுமணம் புரிபவர்களை யாரும் மதிப்பது கிடையாது என கூறும் அற்புதமலர், தனது கிராமத்தின் பண்புகளை பின்பற்றவே பெரிதும் விரும்புகின்றார் என்பதை அவரது பேச்சு உணர்த்தியது.

எவ்வளவு தான் ஆளுமையுள்ள ஒரு முதலாளியாக இவர் விளங்கியபோதும் தனது கிராமத்தின் பண்பாடுகளில் எவ்வித மாற்றமும் ஏற்படுத்தாமல் அதனுடன் இணைந்து போகவே பெரிதும் விரும்புகின்றார். மிக இளவயதில் கணவனை பறி கொடுத்த இளம்பெண் காலம் முழுவதும் தனித்து வாழ்வது கொடுமை அல்லவா? இதைப் பற்றி உங்கள் தனிப்பட்ட அபிப்பிராயம் என்ன எனக்கேட்ட போது அப்பெண்ணுக்கு மறுமணம் அவசியம்தான் என்று

ஆணித்தரமாக எடுத்துக் கூறா மல் சமூக நியமங்களை அனுச ரித்தல் என்பதிலேயே அவரது கவனம் அதிகம் செல்வதை அவ தானிக்க கூடியதாக இருந்தது.

உங்கள் சந்ததிக்கும் தற்போ தைய சந்ததிக்கும் நீங்கள் காணும் வேறுபாடு என்ன என கேட்டோம்.

''முன்பு பள்ளிக்கூடம் போகும் பிள்ளைகள் லீவு நாட்களில் தகப்பன், தாயுடன் சேர்ந்து தொழிலுக்கு செல்வது அதிகம். தனக்கு தேவையான பாட சாலை உபகரணங்களை அவர் களே வாங்கிக் கொள்வார்கள். ஆனால் கிறிகெட் விளையாட்டு எப்ப இங்கு வந்ததோ அன்றிலி ருந்து மட்டையும் கையும்தான், தொழிலில் நாட்டம் இடை யாது. இப்போது பெண் பிள் ளைகள் பாடசாலை போவதும் உயர் படிப்பு படிப்பதும் பரவ லாக அதிகரித்து வருகின்றது. எனினும் சுயமாக சம்பாதிக்கும் பொருட்டு பள்ளிப்படிப்பில் இருந்து விலகும் பெண்கள் இப் போதும் அதிகம் தான் என கூறுகிறார்.

எமது சமூகத்திற்கு இனங் காட்டப்படுவதற்கு ஏற்றதோர் பெண்மணியை செவ்வி கண்ட மனநிறைவுடன் அவரிடமிருந்து விடைபெற்றோம். □

உலகிலேயே அழகு மிகுந்த 50 பேர் என்று பிர பல பிப்பிள் ஏடு ஒரு பட்டியலை வெளியிட்டிருக் கிறது. இதில் 87 வயது கிழவி ஒருவரும் இடம் பெற்றிருக்கிறார், பெயர் குளோரியா ஸ்டுவர்ட். யார் என்று தெரிகிறதா? டைட்டானிக் கிழவிதான்.


பழைய, புதிய சினிமாப்பாடல்கள்,
புரட்சிப்பாடல்கள்
என்பவற்றை நவீன கொம்பாட்டிஸ் மூலம்
ஒலிப்பதிவு செய்து கொடுக்கவும்
நவீன புகைப்படக்கருவிகள் மூலம்
புகைப்படம் எடுக்கவும் நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்

"ஜீன் ஒலிப்பதிவகம்"

பிரதான வீதி, ஜெயபுரம்.

உலக மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பகுதியினர் 10 முதல் 19 வயது வரை உள்ளவர்கள் காணப்படுகின்றனர். மக்கள் தொகையில் பாதி அளவு 25 வயதிற்கு கீழாக உள்ளவர்கள்.

இப்பருவத்தில்தான் வாழ்க்கைக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த கல்யாணம், முதல் உடல் உறவு மற்றும் குழந்தைப் பேறு ஆகியவற்றை அடைகிறார்கள். இவை அதிமுக்கியத்துவம் வாய்ந்தவைகளாக கருதப்படுகின்றன.

வம் 10 முதல் 20 வருடங்கள் வரை தொடரும். முதல் இளநிலை பருவம் 10 முதல் 14 வயது வரையும் கடைசி இளநிலை பருவம் 15 வயதுமுதல் 19 வயது வரை தொடரும். இந்நிலையில்தான் உடல் மற்றும் மனரீதியில் முழுவளர்ச்சி அடைகின்றனர்.

இப்பருவத்தில்தான் இனப்பெருக்க உறுப்புகள் அனைத்தும் வேலை செய்ய ஆரம்பிக்கின்றன. அத்தோடு இரண்டாம் இளநிலை பாலின தன்மைகளும் வளர்ச்சி அடைந்து பாலின

# பெண்களின் பிரச்சனைகள்

தற்காலத்தில் உள்ள சமுதாய பிரச்சனைகளாலும் வயது பெண்களுக்கு பல பிரச்சனைகள் உருவாகியுள்ளன. மனித இனப்பெருக்க பிரிவில் (Reproductive endocrinology) உள்ள முன்னேற்றங்களாலும் பலவிதமான பிரச்சனைக்கு தீர்வுகளும் காணப்படுகின்றன.

இளவயது நிலை என்பது மனித வளர்ச்சியில் ஒரு பகுதி. இந்நிலை முதிர்ச்சி அடையாத குழந்தை பருவத்திலிருந்து உடல் ரீதியாக முழுவளர்ச்சி பெற்ற பருவம் வரை குறிக்கும். இப்பருவம்

துறையில் முழுவளர்ச்சி அடைகின்றது.

இந்நிலையில் ஹைபோதலாமஸ் மற்றும் பிட்யூட்டரி சுரப்பிகளின் முதிர்ச்சியினால், கருமுட்டைகளின் உற்பத்தியும் வளர்ச்சியும் அத்தோடு ஹார்மோன்களின் உற்பத்தியும் ஆரம்பிக்கின்றன. இதனால் இரண்டாவது இளநிலை பாலினத்தன்மைகள் தோன்ற ஆரம்பிக்கிறன.

இந்த ஹார்மோன்களின் மாற்றத்தினால், பாலின மற்றும் உளரீதியான சில பழக்கவழக்கங்களும் தோன்றுகின்றன.

மாதவிடாய் போக்கு தொடங்க ஆரம்பிக்கிறது ஆகையால் பெண்கள், ஆண்களைக் காட்டிலும் இரண்டு வயதிற்கு முன்பே இப்பருவத்தை அடைந்து விடுகின்றனர்.

10 முதல் 16 வயதிற்குள்ளே (சராசரியாக 12/½ வயதில்) மாதவிடாய் பெண்களுக்கு ஏற்பட்டு விடுகிறது. மாதவிடாய் தோன்றும் வயது கடந்து சில நூற்றாண்டுகளாகவே சரியத் துவங்கி உள்ளது. இதுவே ஆளநிலை பருவத்தை அடைந்துவிட்டதாக பளிச்சென்று தெரிந்துவிடுகிறது. இச்சமயத்தில் தான் மார்பு வளர்ச்சி, வெளி இனப்பெருக்க உறுப்புகளில் முடி வளர்ச்சி ஆகியவற்றை தொடர்ந்து மாதவிடாய் போக்கும் தோன்ற ஆரம்பிக்கிறது.

மாதவிடாய் தோன்ற ஆரம்பிக்கும் இரண்டு மாதம் முன்பே இப்பருவப் பெண்கள் வளர்ச்சியின் உச்சிநிலையை அடைந்து விடுகின்றனர். 16 முதல் 17 வயதிற்குள் முழுமை அடைந்துவிடுகிறது.

பல்வேறு வகையான இளவயது பெண்களுக்கு ஏற்படும் பிரச்சனைகள்:

☆ மாதவிடாய் குறைபாடுகள்.

★ பருவத்திற்கு வராமலே இருத்தல்.

★ மாதவிடாயின் போது ஏற்படும் வயிற்றுவலி.

★ அதிகமான வளர்ச்சி அல்லது மிகவும் குள்ளமாக இருத்தல்.

★ அதிக ரோம வளர்ச்சி

★ உடல் பருமனாக இருத்தல்

★ வெள்ளைபடுதல்

★ கீழ்வயிற்று பகுதியில் தோன்றும் கட்டிகள்

★ ஆண் பெண் வேறுபாடு காணமுடியாமை

★ முகப்பரு

★ குறிப்பிட்ட வயதிற்கு முன்பே பருவமடைந்தல்

மாதவிடாய் குறைபாடுகள்:

மாதவிடாய் வந்தபிறகும் சில பிரச்சனைகள் ஏற்படுகின்றன. அதாவது, மாதவிடாய் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ வருகிறது. இந்த அதிக மற்றும் குறைந்த மாதவிடாய் இரத்தப் போக்கு 5 ஆண்டுகளுக்கு பிறகு 40%ல் இருந்து 20% சதவீதமாக உள்ளது. அதிகமான நோயாளிகளிடம் இந்த இடர்பாடுகளுக்கான முக்கிய கோளாறுகளை கண்டுபிடிக்க முடிவதில்லை. ஹார்மோன்களின் தாக்குதல் இருந்தும், முதலில் வரும் இரத்தப்போக்கு கருமுட்டையின்றியே வருகின்றன, இதனால் இவ்வாறு மாதவிடாய் குறைபாடுகள் இருக்கும்போது ஹார்மோன்களை முதலில் உபயோகப்படுத்துவதில்லை.

அதிக இரத்தப்போக்கு என்பது மிகவும் உயிருக்கு ஆபத்தானது. ஆகையால் அதை உடனே

திருத்திவிட வேண்டும். சில குறிப்பிட்ட அடிவயிற்று கட்டிகளும், சில குறிப்பிடத் தக்க நாளமில்லா சுரப்பிகளின் குறைபாடுகளும்தான் இதற்கு காரணம். அதற்கு தகுந்தவாறு வைத்தியம் செய்ய வேண்டும்.

மாதவிடாய் வராமை (Primary amenorrhoea):

இது ஒரு முக்கிய பிரச்சனை. ஒரு பெண் 17 வயது வரை பருவம் அடையாமல் இருந்தால் அதற்கு Primary amenorrhoea என்று அழைக்கப்படுகிறது. இது தைராய்டு சுரப்பி சரிவர வேலை செய்யாமல் இருப்பதாலோ கர்ப்பப்பை இல்லாமல் இருப்பதாலோ, பெண்களுக்கான புற இனப் பெருக்க பகுதியின் மேலுள்ள கன்னித்திரை(Hymen) என்ற பகுதி அதிக தடிமனாக இருப்பதாலோ, ஹைபோதலாமஸ் வேலை செய்யாமல் இருப்பதாலோ இந்த பிரச்சனை தோன்றுகிறது.

மாதவிடாயின் போது வயிற்றுவலி தோன்றுதல்

இது 5 முதல் 40 (சதவீதம்) பெண்களிடையே காணப்படுகிறது. இவ்வகையான வயிற்றுவலி சிலருக்கு சாதாரணமாகவோ, சிலருக்கு அதிகமாகவோ இருக்கலாம். இவ்வலியோடு வாந்தி கூட தோன்றலாம். இதில் இரண்டு வகைகள் உண்டு.

முதல் வகையான வயிற்றுவலி இயற்கையானது. இது ovulatory cycle காரணமாக தோன்றலாம். இதற்கு மருத்துவம் தேவையில்லை. இவ்வலி மாதவிடாய் கண்ட முதல் நாள் மட்டுமே இருக்கும்.

இரண்டாவது வகையான வயிற்றுவலி மாதவிடாய் ஆரம்பிப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பே தோன்றி மாதவிடாயின் போது தொடர்ந்து இருக்கும். இது இயற்கைக்கு புறம்பானது.

இதற்கு உடனே மருத்துவம் செய்தல் அவசியம். இது பாரம்பரியமாகவோ, அல்லது மனரீதியின் காரணமாகவோ தோன்றலாம். இதற்கு வலி நிவாரணி மற்றும் தசை பிடிப்பான்களின் நிவாரண மாத்திரைகளை எடுப்பதால் இதைக் குறைக்கலாம்.

அதிக ரோம வளர்ச்சி (Hirsutism)

குறிப்பாக முகம், மேலுதடு, கீழ்த்தாடை, மார்பு, வயிறு மற்றும் கால்கள் போன்ற பகுதிகளில் வளர்கிறது. இது கருப்பை, மற்றும் கருமுட்டை உருவாகும் பகுதியில் சில சிறிய கட்டிகள் ஏற்படுவதாலோ, அல்லது அடரீனல் சுரப்பியின் செயல்பாடுகள் மாறுவதாலோ தோன்றலாம். இக்கட்டிகள் ஹார்மோன்களின் காரணமாக தோன்றலாம்.

வளர்ச்சி மாற்றங்கள்.

பிட்யூட்டரி சுரப்பியின் வளர்ச்

சிக்கான ஹார்மோன் அதிகமாக சுரப்பதால் அதிகமான வளர்ச்சி தோன்றுகிறது.

கருமுட்டை உருவாகும் பகுதி (Ovary) சரியான வளர்ச்சி ஏற்படாமல் இருந்தால், ஈஸ்ட்ரோஜன் அளவு குறைந்தும் வளர்ச்சி ஹார்மோன் அதிகமாக சுரந்து அதிக வளர்ச்சி ஏற்படலாம்.

**குள்ளத்தன்மைக்கான காரணங்கள்**

★ தைராய்டு சுரப்பி சரிவர சுரக்காமல் இருத்தல்.

★ பிட்யூட்டரி சுரப்பி சுரக்காமல் இருந்தல்.

★ Ovary சரியாக உருவாகாமல் இருத்தல்.

இத்தகைய காரணத்தினால் குள்ளத்தன்மை தோன்றலாம்.

பிட்யூட்டரி சுரப்பி சரியாக சுரக்காமல் இருந்தால், உடலுக்குதேவையான வளர்ச்சி ஹார்மோன் கிடைப்பதில்லை. இதனால் எலும்புகள் வளர்ச்சி அடையாமல், குள்ளமாக இருக்கின்றனர். இதனால் இரண்டாவது இளநிலை பாலின தன்மைகளும் தோன்ற தாமதமாகி விடுகிறது.

தைராய்டு சுரப்பி குறைவாக சுரப்பதாலும் இந்நிலை உருவாகிறது. ஆனால், இந்நிலையில் குள்ளத்தன்மை தோன்றுவது அதன் கால நிலையை பொறுத்தது. இது இளநிலை பருவத்தில் வந்தால் வளர்ச்சி பாதிக்கப்படுவதில்லை.

மூன்றாவதாக ovary சரியாக வளர்ச்சி அடையாமல் இருப்பதாலும் தோன்றலாம். இது பிறப்பிலிருந்து கூட தோன்றலாம் இதை இந்த இளவயது பருவத்தில் கண்டறிந்து கொள்வது மிக அவசியம். இதற்கு ஈஸ்ட்ரோஜன் மற்றும் புரோஜெஸ்ட்ரான் ஹார்மோன்களை பலமாதங்களுக்கு தருவதன் மூலம் இதை குணப்படுத்தலாம்.

**உடல் பருமனாக இருத்தல்**

இது ஒரு பொதுவாக காணப்படும் பிரச்சனைகளில் ஒன்று. பிட்யூட்டரி சுரப்பி ஒழுங்காக (குறைவாக) சுரப்பதாலும் அல்லது அட்ரீனல் கார்டெக்ஸ் அல்லது இவ்விரண்டுமே குறைவாக சுரப்பதாலும் அல்லது அதிகமாக , சாப்பிடுவதாலும் ஏற்படுகிறது.

அட்ரீனல் கார்டெக்ஸினால் ஏற்படும் உடல் பருமன் குர்சிங் சின்ட்ரோமும் (Cursing Syndrome) சேர்ந்து காணப்படும்.

**வெள்ளைப்படுதல்**

இது குடல் உண்ணிகளாலோ, சரியாக சாப்பிடாமல் இருப்பதாலோ அல்லது காசநோயினாலோ மாதவிடாய்க்கு முன் பின் வரும்.

அடிவயிற்றில் தோன்றும் கட்டிகள், தோன்றுவதற்கான காரணங்கள்:

★ சாதாரண கட்டிகள்

★ கர்ப்பப்பையில் இரத்தம் தேங்குவதால் தோன்றும் கட்டிகள்.

★ நீர்ப்பை நிறைந்துவிடுதல்

★ கர்ப்பமாக இருத்தல்

★ யோனியில் தோன்றும் கட்டிகள்

ஆண், பெண் வேறுபாடு காணமுடியாமை:

புற இனப்பெருக்க உறுப்புகளில் ஆண், பெண் இரண்டிற்கும் வித்தியாசம் தெரியாமல் அமைந்திருக்கும். இது பிறப்பிலிருந்தே காணப்படும்.

முகப்பரு

அடுத்த முக்கிய பிரச்சனை முகப்பருதான். இந்த பருவத்தில் தான் அதிகமாக தோன்றுகிறது. இப்பருவத்தில் வியர்வைச் சுரப்பிகள் ( Sebaceous glands ) வேகமாக வேலை செய்வதால் இப்பருக்கள் தோன்ற ஆரம்பிக்கின்றன. முகத்தின் சுரப்பசை மீது கைரோட்டின் படிவதால் இது உண்டாகிறது. இதை தடுக்க சிறிய உடற்பயிற்சிகள் செய்தல் அவசியம். மலச்சிக்கலை முதலில் தடுத்தல் வேண்டும். கார்போஹைட்ரேட் மற்றும் கொழுப்பு பொருள்களை தவிர்க்க வேண்டும். மேலும் இதை தடுக்க பல மருந்துகள் கொடுக்கப்படுகிறது.

இது போன்ற பிரச்சனைகள் தான் இளவயது பெண்களுக்கு ஏற்படும் சில பிரச்சனைகள். இவைகளை பயிற்சி முறைகளாலோ, இரத்தப் பரிசோதனை முறைகளாலோ, ஹார்மோன் பரிசோதனை மூலமாகவோ, குரோமோசோம் மற்றும் அல்ட்ரா சவுண்ட் மூலமாகவோ கண்டறியலாம்

நன்றி: ஹெல்த் □

மும்பையில் வாழும் ரூபாலி ரெபேலே ஒரு கல்லூரி மாணவி. 16 வயதான இவரை சாகர் கன்யா என்று அழைக்கிறார்கள். கடல் கன்னி என்று பொருள். சமீபத்தில் இவர் அரபிக் கடலில் 80 கி.மீ. தொலைவை 19 மணி, 44 நிமிடம், 49 விநாடிகளில் நீந்தியே கடந்து சாதனை புரிந்திருக்கிறார். இவர் 12 ஆவது வயதில் 43 கி.மீ. தூரம் உள்ள பாக் ஜலசந்தியைக் கடந்தாராம். முதலைகள் நிறைந்த பகுதி, ஆபத்தை பொருட்படுத்தாமல் நீந்தி சாதனை புரிந்து உலகை வியக்கவைத்தவர். ஆங்கிலக்கால்வாயையும் அப்போதே நீந்திக் கடந்த பெருமை உண்டு. கல்லூரியில் படித்துக் கொண்டே கடலைக் கடக்கும் சாதனைகளை சவாலாக ஏற்று பெயர் பெற்று வருகிறார். பெண்கள் யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல என்பதற்கு எடுத்துக் காட்டு.

தொடர்கதை



# மரணக்கூறுகள்

ஆதிலட்சுமி சிவகுமார்

## முன்கதைச் சுருக்கம்:-

*வாணியை அழைத்த அப்பா இடம்பெயரத் தயாராகுமாறு சொல்கிறார். வாணியும் அவளது பவானிக்காளும் மரத்தடியில் அமர்ந்து கல்பம் பார்க்கிறார்கள். வாணியின் மனது பல விதமான நினைவுகளைச் சிந்திக்கிறது. தன்மீது காட்டப்படும் கட்டுப்பாடுகளையிட்டு அவள் மனம் வெறுப்படைகிறது. இவ்வேளை மாட்டுவண்டில் ஒன்றை ஒழுங்கு செய்துவிட்டு அப்பா வந்து சொல்கிறார்.*

மாட்டு வண்டில் பயணம் வாணிக்கு புதிய அனுபவத்தைக் கொடுத்தது. வழி முழுவதும் உடமைகளுடன் மக்கள் இடம் பெயர்ந்து கொண்டிருந்தார்கள். பயமும், களைப்பும் மேலிட்ட முகங்கள் அவள் மனதில் துக்கத்தைத் தருவித்தன.

சூரியன் மேற்கே சாயத் தொடங்கிக் கொண்டிருந்த போது மட்டுவில் மாமியின் வீடு அண்மித்தது. வாணிக்கு ஏனோ அழுகை அழுகையாக வந்தது. மிகுந்த சிரமப்பட்டு அவள் தன் அழுகையை கட்டுப்படுத்திக் கொண்டாள்.

மாட்டுவண்டில் அந்த வீட்டின் முன்னே நின்றது. அப்பா இறங்கி உள்ளே போனார். உள்ளேயிருந்து மட்டுவில் மாமியும், மகளும் ஓடிவந்தார்கள்.

' ஏன் வண்டிலுக்கையே இருக்கிறியள் ... எல்லாரும் இறங்கி வாருங்கோவன்......' மாமியின் விருந்தோம்பலை அதிசயித்தாள்.

' இறங்குங்கோ ' அதே அதட்டலுடன் அப்பா நின்றார். எல்லோரும் இறங்க மாமி மட்டும் வண்டிலுக்குள் இருந்தாள்.

' பழையது எல்லாத்தையும் மறந்து போட்டு இறங்கி வாங்கோ ... ' மட்டுவில் மாமி மாமியை கையில் பிடித்து இழுத்தாள்.

மாமியும் இறங்கி உள்ளே வந்தாள்.

வாரம் ஒன்றாகிவிட்டது. மட்டுவில் கிராமத்தின் அழகு வாணிக்கு நிரம்பப் பிடித்திருந்தது. வீட்டிலிருந்து கால்மைல் தூரத்தில் கோயில் இருந்தது. கோயிலிலும் நிறையப்பேர் இடம் பெயர்ந்திருந்தார்கள்.

மாமிவீடு அழகாக இருந்தது. வெளிநாட்டுப் பொருட்கள் வீட்டில் வரவேற்பறையை அலங்கரித்தன.

வீட்டின் இடது முன்புறமாக அடர்த்தியான மூன்று மாமரங்கள் நின்றன. வீட்டுக்குப் பின்னால் ஏராளமான தென்னை மரங்கள் நின்றன. தென்னை

மரங்களின் கீழே தேங்காய்கள் விழுந்து கவனிப்பாரற்றுக் கிடந்தன.

பசுமாடுகளும் நின்றன.

மாமி குடும்பத்தினரை வாணிக்கு நன்றாகப் பிடித்தது. மாமி இயல்பாகவும், அமைதியாகவும் இருந்தாள்.

யாழ்நகரினை நோக்கி இராணுவம் ஏவும் எறிகணைகளின் சத்தமும் கேட்டவண்ணம் இருந்தன.

எல்லோரும் ஒன்றாகவே சமைத்தார்கள். களைத்து வரும் எல்லோருக்கும் மாமி வீட்டில் உணவு கொடுத்தார்கள்.

மாமியின் தாராளமான மனம் அவளை அதிசயிக்க வைத்தது. பவானி மச்சாளும் மனதில் எதையும் வைக்காமல் அன்பாகப் பழகினாள்.

யாழ்ப்பாணத்துச் சண்டையில் நாதினி காயப்பட்டிருப்பதாக அப்பாவுக்கு யாரோ சொன்னதாக அப்பா கூறினார்.

மாமி பெரிதாக அழத்தொடங்கிவிட்டாள்.

அப்பா செய்தி உண்மைதானா என்று அறிவதற்காக இரண்டு நாட்கள் அலைந்தார். ஒன்றும் அறிய முடியவில்லை.

இரண்டு நாட்களாக அம்மாவுக்கு நல்ல காய்ச்சல் அடித்தது. ஊரைவிட்டு வந்ததில் அவள் உடைந்து போயிருந்தாள்.

ஊரில் இருக்கும் போது அம்மாவுக்குக் காய்ச்சல் வரும் சந்தர்ப்பங்கள் அரிதாகத்தான் இருக்கும். அப்படியான பொழுதுகளில் கூட அப்பா அம்மாவை டொக்டரிடம் அழைத்துச் செல்வது இல்லை. அப்பாவே சென்று தன் டொக்டர் நண்பரிடம் கதைத்து அம்மாவுக்கு மருந்து வாங்கிவந்து கொடுப்பார்.

திடீரென்று அந்த டொக்டரின் மகன் சங்கரனின் நினைப்பு வந்தது. வசதியான குடும்பத்துப்பிள்ளை என்ற தலைக்கனத்தினால் அவன் செய்யும் தவறுகள் ஏராளமாயிருந்தன.

இப்போது மட்டுவில் பகுதிகளிலும் ஷெல்கள் வந்து விழத்தொடங்கியிருந்தன. குண்டுகளை கொட்டித்தள்ளும் விமானங்களும் இரைந்து கொள்ள ஆரம்பித்தன.

விமானங்கள் சுற்றும் வேளைகளில் தென்னங்காணிகருள் எல்லோரும் மறைந்து நிற்பார்கள். விமானங்கள் யாழ் நகருள் சென்று குண்டுகளை கொட்டிவிட்டு வரும்.

இப்போது அவளுக்கு அந்தக் குண்டு வெடிப்பின் அகோரம் கண்களுக்குள் வந்தது.

தேவாலயத்தில் வீழ்ந்த குண்டுகளால் சிதைந்த உடல்களை அவளும் பார்த்திருந்தாள். இப்போது அதை நினைத்தாலும் இவளுக்கு பயமும், ஆத்திரமுமாக இருக்கும்.

பவானி மச்சாளும் மாமியும் கோயிலுக்குப் போயிருந்தார்கள். அப்பா சாவகச்சேரியில் இருக்

கும் தன் நண்பர் ஒருவரைச் சந்திக்கச் சென்றிருந்தார். அப்பாவுடன் அண்ணன் ராஜீவும் சென்றிருந்தான்.

அப்பாவின் அந்த நண்பர் சாவகச்சேரி நகரப் பகுதியில் மிகவும் வசதியாக இருந்தார்.

அம்மா இங்கும் அடுப்படி வேலைகளைத் தான் பொறுப்பெடுத்திருந்தாள்.

'அம்மா .........'

அம்மா அமைதியாகத் திரும்பிப்பார்த்தாள்.

'ஏனம்மா கோயிலுக்குப் போயிருக்கலாமே ....'

அம்மா எதுவும் சொல்லவில்லை. மகளின் கேள்வி அநாவசியமானது என்பது போன்ற நினைப்புடையவள்போல தன் வேலையில் ஆழ்ந்தாள்.

'அம்மா ...... ஏனம்மா நீ இப்படி இருக்கிறாய்? உனக்கு வெளி உலகமே வேண்டாமா?... ... உனக்கு சுவாசிப்பதற்கு கரிப்புகை தவிர வேறேதுவும் வேண்டாமா?

வாணிக்கு தொண்டை அடைத்தது.

அம்மா மீது ஒருகணம் ஆத்திரம் பிறந்து – மறைந்தது.

யாழ்நகரத்தில் சண்டைகள் உக்கிரமாய் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

குண்டுச்சத்தங்கள் செவிகளை அலறந்தன.

தான் சிறுமியாக இருந்த காலத்திலிருந்தே தமிழ்ச் சனங்கள் மீது சிங்கள ஆக்கிரமிப்பு நடைபெறுவதாக அம்மா கூறியது வாணிக்கு நினைவில் வந்தது. அம்மா 'இப்போது ஐம்பது வயதை அண்மித்துக்கொண்டிருக்கிறாள் ..... ஆனாலும் அம்மாவுக்கு இந்தச் சண்டை சச்சரவுகளில் ஈடுபாடு கிடையாது.

அம்மாவின் அப்பா சிங்கள தேசத்தில் பெரிய முதலாளியாக இருந்ததாக அவள் அறிந்திருக்கிறாள்.

அம்மாவும் சிறுவயதில் அங்கே தான் இருந்தாள். ஆனால் நாளாக நாளாக பிரச்சினைகள் உருவாகி, ஒரேநாளில் அவர்களின் வீட்டை சிங்களவர் கொளுத்தி எரிக்க, ஓடிவந்துவிட்டார்கள்.

அதன் பிறகு அம்மாவின் குடும்பம் யாழ்ப்பாணத்தில்தான் வசித்தது.

திடீரென்று அம்மம்மாக் கிழவியின் நினைப்பு வாணிக்கு வந்தது. எவ்வளவோ மன்றாடியும் வீட்டைவிட்டு வரமறுத்து தங்கிவிட்ட அந்த உள்ளத்தின் உறுதியை அவள் வியந்தாள்.

குண்டுகள் அறம்புறமாக விழும் அந்தப் பிரதேசத்தில் அம்மம்மாக் கிழவி உயிருடன் இருக்குமா என்ற வேதனை எழுந்தது.

புறுபுறுத்தாலும் முணு முணுத்தாலும் தன்னிடம் நிறைந்த அன்பு உண்டென்று அவளுக்குத் தெரியும்.

அப்படி ஒரு சாவு அவளுக்கு அமைந்து விடுமோ என்று மனம் ஆதங்கப்பட்டது.

'வீரமோ வாணி... ...'
பவானி மச்சாள் கோயிலிலிருந்து திரும்பியிருந்தாள்.

'நாதினியோடை யாழ்ப்பாணத்தில் நிண்ட ஒருபிள்ளையை வழியிலை கண்டனாங்கள் வாணி .......'

'நாதினி எங்கையாம் ....'

'உள்ளுக்குத்தான் நிக்கிறாளாம் ..... அம்மாவுக்கு சொல்லேல்லை'

'நாதினி எவ்வளவு வீரமான ஆள்? .. நாங்கள் பயந்தோடி இஞ்சை வந்திருக்கிறம்...... அவள் வீரத்தோடை ஊரிலை நிக்கிறாள் ...' வாணியின் மனம் வெட்கப்பட்டது.

'ஏன் நாதினி மாதிரி என்னாலை வீரம் பெறமுடியுதில்லை?'

வாணி சிந்தித்துக்கொண்டிருக்க பவானி அருகில் வந்தாள்.

'வாணி வாருமன் சாப்பிடுவம்......'

'எனக்கு இப்ப பசிக்கேல்லை பவானி மச்சாள் ....'

'உமக்கு நல்லா யோசினை கூடிப்போச்சுது. பேசாமவாரும் எல்லாரும் ஒண்டாச்சாப்பிடுவம்.......'

'யோசிக்கிறது பிழை எண்டு சொல்லுறியளோ?

'யோசிக்கிறது பிழையில்லை வாணி... ஆனா...... எங்கட தேவையளுக்கு ஏற்றமாதிரி...... பிரயோசனமான முறையில் யோசிக்கவேணும்........'

வாணி எதுவும் பதில் சொல்லவில்லை.

அவளுக்கு யோசிப்பது என்பது சுகமாக இருக்கிறது.

பவானி மச்சாள் வீட்டுக்குள்ளே போய்விட்டாள்.

அந்த மதிய வேளையிலும் சயிக்கிள்களில் சனங்கள் அலைந்து கொண்டிருந்தார்கள்.

'வீட்டுக்காரர் ...... வீட்டுக்காரர் .......'

வாசலில் யாரோ அழைத்தார்கள்.

'ஆரது? உள்ள வாருங்கோ ....' மட்டுவில் மாமி கூப்பிட்டாள். ஒரு பெண் இரண்டு குழந்தைகளையும் கொண்டு உள்ளே வந்தாள். அந்தப் பெண்ணின் முகத்தில் பசியும், தாகமும் தெரிந்தன. குழந்தைகள் மாலைநேரத்துப் பூக்களைப் போன்று வாடியிருந்தன மாமி உள்ளேபோய் சாப்பாடு எடுத்துவந்து கொடுத்தாள்.

'எங்கை இருந்து வந்தனீங்கள் ......'

'நாங்கள் உரும்பிராய்......'

'தனியவே வந்தது ......'

'சனங்கள் நிறைய வந்தது தானே ..... வந்த சனத்தோட சேர்ந்து ரண்டு பிள்ளைகளையும் கொண்டு வந்தனான் ...'

மாமி எதுவும் கேட்கவில்லை. அந்தப்பெண் சோத்தை

இரட்டிய அம்மாவை வாணி பார்த்தாள்.

இடம்பெயர்ந்த கொஞ்ச நாட்களில் அம்மா எப்படி உரு மாறிப் போய்விட்டாள்?

வாணிக்கு சொந்த வீட்டின் நினைப்பு வந்தது. அடிவளவு மாமரத்தின் கீழ் அமர்ந்து சோதினைக்காகப் படித்த ஞாபகங்கள் எழுந்தன.

அந்த மாமரம் பூத்துக்காய்க்கும் பருவத்தில், அங்கு குடியேறி ஆர்ப்பாட்டம் செய்யும் அணிற் பிள்ளைகளைப் பார்க்கவேண்டும் போலிருந்தது.

அப்பாவும் அண்ணாவும் களைத்துப்போய் வந்தார்கள். 'தம்பி – களைச்சுப்போனாய்... கெதியாப்போய் சாப்பிடு..?' முன் திண்ணையில் அமர்ந்த அப்பா அண்ணாவை அனுப்பினார்——

'அப்பா——என்னை சாப்பிட்டியா என்று ஒரு சொல் கேட்கமாட்டியளா?' மனம் இரந்தது.

'வாணி - குடிக்கிறதுக்கு தண்ணி எடுத்துவா——'

குரலில் அதே வழமையான அதிகாரத்தொனி. அப்பா சொல்லி முடிப்பதற்குள் அம்மா தண்ணீர்ச் செம்புடன் வந்தாள்.

அப்பா தண்ணீரை வாங்கி கடகடவென்று குடித்தார்.

அவர் முகத்திலும் அலைச்சலின் பாதிப்பு தெரிந்தது.

சேட்டைக் கழற்றிக் கையில் எடுத்துக்கொண்டு அப்பா உள்ளே போனார்.

'மச்சாள்...— அண்ணை களைச்சுப்போய் வந்திருக்கிறார் —போய் சாப்பாட்டைக் குடுங்கோவன்———'

மட்டுவில் மாமி சொன்னவுடன் அம்மா உள்ளேபோனாள்.

'அம்மா... போட்டுவாறம்...' இரண்டு பின்னல்களையும் கொண்டு அந்தப் பெண் எழுந்து விடைபெற்றாள்.

'வாணி...— எழும்புபிள்ளை— சாப்பிடு ...—'

மாமியும் எழும்பினாள்.

'ஐயோ ...— என்ர ஐயோ— தம்பி ...— ஓடிவாடா —— —' அது வாணியின் தாயின் குரல்— தும்மல் இருமலைக்கூட அடக்கி, ஒடுக்கி வெளிப்படுத்தும்... அம்மாவின் இயல்புக்குமாறாய்—— அம்மா எழுப்பிய ஒலி. அதுவும் அபயஒலி——வாணியை நடுங்க வைத்தது——... முற்றத்தில் நின்றவர்களும்—— அடிவளவில் தென்னை மரங்களின் கீழே களைப்பாறிக் கொண்டவர்களும் உள்ளே ஓட — வாணி கண்களை மூடிக்கொண்டு அப்படியே நின்றாள்.

(தொடரும்)

---

சிங்கப்பூரில் முஸ்லிம்களிடையே விவாகரத்து பெருகி வருவதால் அரசாங்கம் மிகவும் கவலை அடைந்திருக்கிறது. 1995 இல் 983 ஜோடிகள் விவாகரத்து செய்து கொண்டன. அடுத்த ஆண்டு 11 சதவீதமாக விவாகரத்து அதிகரித்தது. 1080 ஜோடிகள் சட்டப்படி பிரிந்து கொண்டன. இதை தடுக்க சிங்கப்பூர் அரசு புதிய திட்டம் ஒன்றை வகுத்திருக்கிறது. இதன்படி திருமணம் செய்து கொள்ளும் முஸ்லிம் இளைஞரும் பெண்ணும் அரசு ஏற்பாடு செய்துள்ள பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ள வேண்டும். இங்கு விவாகரத்து ஏற்படாமல் ஒற்றுமையாகக் குடும்பம் நடத்துவது எப்படி என்று கற்பிக்கப்படும். இத்திட்டம் வரும் ஜூலை முதல் நடைமுறைக்கு வருகிறது.

# ஜோன் கல்வி நிலையம்

முல்லைவீதி புதுக்குடியிருப்பு

க. பொ. த உயர்தர 98, 99, 2000
ஆண்டுகளுக்கான கலைவர்த்தக, கணித
விஞ்ஞான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

மற்றும் ஆண்டு 04 தொடக்கம் 11 வரை
யான வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

- நிர்வாகி -

உங்களுக்கு தேவையான
- பால்மா வகைகள்
- அழகுசாதனப் பொருட்கள்

யாவும் பெற்றுக் கொள்ள சிறந்த இடம்

வைத்திலிங்கம்
பல்பொருள் வாணிபம்

முல்லைவீதி புதுக்குடியிருப்பு

உரிமையாளர் V. ரவிச்சந்திரன்.

உங்களது மனதுக்குப் பிடித்தமான அழகிய,
நவநாகரீக வடிவங்களில் தங்க, வைர நகைகளை
உடனடியாகவும்; ஓடர் செய்தும்
பெற்றுக்கொள்ள, தரம் நாடுவோர்
தவறாது நாடுமிடம்

## கிருஷ்ணா நகைத் தொழிலகம்

மூல்லை சாலை, திருமபுரம்

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதத்துடன்
நியாயமான விலையில் அசல் 22 கரட்
தங்க நகைகளை குறித்த தவணையில்,
நினைத்த டிசைன்களில் வழங்குபவர்கள்
இவர்களே. இதன் கிளை,

பரந்தன் வீதி, புதுக்குடியிருப்பில்

## கமலா நகைத் தொழிலகமாக

இயங்குகிறது என்பதை வாடிக்கையாளர்களுக்கு
அன்புடன் அறியத்தருகின்றோம்

உரிமையாளர்:- வி. கிருஷ்ணபிள்ளை